648

"வக்கீல்"

தமிழ் சட்டப் பத்திரிகை,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 AUG 1957
MADRAS

1956
நவம்பர் & டிசம்பர்
இதழ் 6 & 7

நிலைச் சட்டங்கள்

நியாய வாரச் சட்டம் (1956)

1956-ல் திருத்தி அமைக்கப்பட்ட

சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம்

உதாரணங்களுடன் தமிழில் விளக்கம்

All Rights Reserved.

விலை ரூ. 1.

JL
Z2Hm N49VK.
N56. 8. 687
216523

THE VAKIL

TAMIL LAW MAGAZINE

"வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதப் பத்திரிகையாகப் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

நீங்கள் "வக்கீல்" பத்திரிகையின் சந்தாதாராகச் சேர்ந்துவிட்டீர்களா?

இல்லாவிட்டால் உடனே சேரவும்.

ஒவ்வொரு மாதமும் புதிதாக வரும் சட்ட திட்டங்களை நீங்கள் இப்பத்திரிகையிலிருந்து தமிழில் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3.
ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5.
ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:– "வருட சந்தா" என்பது 12 தொடர்ந்த இதழ்களுக்கான சந்தாவைக் குறிக்கும். **வருடச் சந்தாதார்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். ஆயுள் சந்தா தார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங் களும், அனுப்பப்பட்டு வரும்.**

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26, கும்பகோணம். (தென் இந்தியா)
—என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

ACL-TNAL
01779
1123

"வக்கீல்"

பொருளடக்கம்

பக்கம்

நிலச் சட்டங்கள்—குறிப்பு ... 5

நியாய வாரச் சட்டம் (1956) தமிழில் விளக்கம் ... 9—34

செக்ஷன்

1. சட்டத்தின் பெயரும் அமுலில் இருக்கும் இடங்களும், அமுல் தேதியும். ... 9

2. சில சொற்களின் பொருள். ... 10

"விவசாய வருடம்" ... 10

"சாகுபடி செய்யும் குத்தகைதார்" ... 10

"நியாய வாரம்" ... 11

"தோட்ட நிலம்" ... 11

"சர்க்கார்" ... 11

"நிலச் சொந்தக்காரர்" ... 11

"சாதாரண மொத்த மகசூல்" ... 12

"ரெண்டு கோர்ட்" "ரெண்ட் டிரிபுனல்" ... 13

3. சாகுபடிதார், நிலச் சொந்தக்காரர் இவர்களுடைய உரிமைகளும் பொருப்புகளும். ... 13

4. நியாய வாரம் என்பது என்ன? ... 20

216523

5. வாரத்தை ரொக்கமாகவோ, தானியம் அல்லது பண்டமாகவோ கொடுப்பது பற்றி. ... 21

6. நியாய வாரத்தை மாற்றுவது பற்றி ... 24

7. மகசூலைக் களத்து மேட்டிலேயே பிரித்துக்கொள்ள வேண்டும். ... 25

8. ரெண்டு கோர்ட்டுகள், ரெண்ட் டிரிபுனல்கள் அமைப்பு. ... 25

9. ரெண்ட் கோர்ட்டுக்கு மனுக்கள் — ரெண்ட் டிரிபுனலுக்கு அப்பீல்கள். ... 25

10. செலவு தொகை. ... 26

11. ஹைகோர்ட்டில் ரிவிஷன். ... 26

12. தானியங்களின் விலை ஜாப்தாவை கலெக்டர் பிரசுரம் செய்யவேண்டும். ... 27

13. ஒப்பந்தங்களும் மற்ற சட்டங்கள் முதலியனவும் இச் சட்டத்தால் ரத்தாயின. ... 28

14. ஒரு வேலி நன்செய்க்குமேல் நிலம் வைத்திருக்கும் சாகுபடிதார். ... 28

15. விதிவிலக்குகள். ... 32

16. சில தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் செல்லமாட்டா. ... 33

17. விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரம். ... 33

18. இச்சட்ட சிக்கல்களை நீக்க சர்க்காருக்கு அதிகாரம். ... 34

Z211m N49V15
N56. 8.b57

சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் (1955) — 1956 திருத்தங்களுடன் — தமிழில் விளக்கம். ... 35-60

செக்ஷன்

1. சட்டத்தின் பெயரும், அமுலில் உள்ள இடங்களும், அமுல் காலமும். ... 36

2. சொற்களின் பொருள். ... 36

"சாகுபடிதார்" ... 36

"சாகுபடி" ... 37

"தோட்ட நிலம்" ... 38

"சாகுபடி நிலம்" ... 38

"நிலச்சுவான்தார்" ... 38

"சொந்த உழைப்பைக்கொண்டு சாகுபடி செய்பவர்" ... 38

"ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்" ... 39

3. சாகுபடிதார்களை நிலச்சொந்தக்காரர் வெளியேற்றக் கூடாது. ... 40

4. சாகுபடிதார்கள் மீண்டும் நிலத்தை சுவாதீனம் பெறுவதற்கு உரிமை உண்டு. ... 45

4A. சொந்த சாகுபடி செய்ய, நிலச்சுவான்தார், குத்தகைதாரிடமிருந்து நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமை. ... 50

4B. குத்தகைப் பத்திரம் எழுதிக் கொள்ளுவதுபற்றி. ... 54

5.	காலாவதி கெடு கணக்குச் செய்வது பற்றி. ...	55
6.	சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் இல்லை. ...	56
6A.	சில சிவில் கோர்ட்டுத் தாவாக்கள் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றப்படும். ...	56
6B.	ஹைகோர்ட்டில் ரிவிஷன் செய்யலாம்.	57
7.	விதிகள். ...	57
	சென்னை சாகுபடிதார் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் (1956) ...	58

திருத்தச் சட்டத்தின்
செக்ஷன்கள்

8.	திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் வரை தாய்ச் சட்டம் நீடிக்கும். ...	58
9.	தென் கன்னட சாகுபடிதார் பாது காப்புச் சட்ட ரத்து. ...	59
10.	தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் இதற்கு முரணாக இருந்தால் செல்லாது. ...	59
11.	தஞ்சைச் சட்ட சமரச அதிகாரியிடம் இருக்கும் சில நடவடிக்கைகள் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றப்படும். ஆனால் ரிவின்யூ கோர்ட்டில் இருக்கும் நடவடிக்கைகள் அங்கேயே இருக்கும்....	59
12.	27—9—1956க்கும் 1—10—1956க்கு மிடையே அகற்றப்பட்ட குத்தகைதாரர்கள். ...	60

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 8 நவம்பர் — டிசம்பர் 1956 இதழ் 6 & 7

நிலச் சட்டங்கள்

நிலச் சட்டங்கள் ஒருவாறு வந்துவிட்டன. உங்களுக்கு நிலமே இல்லாதிருந்தால் நீங்கள் அதிருஷ்டசாலிகள்தாம். நிலச் சட்டங்களின் நுட்பங்களும், விதிகளும், விதிவிலக்குகளும் உங்களுடைய மூளைகளைக் குழப்பமாட்டா. அவ்வப்பொழுதுள்ள அரிசி விலையை மட்டில் நீங்கள் கவனித்துவந்தால் போதும். அரிசி எங்கிருந்து வருகிறது, நெல் பயிரை யார் எப்படி உற்பத்திச் செய்கிறார்கள் என்ற கவலையும் உங்களுக்கு வேண்டாம். சர்க்காரிலோ, காரியாலயங்களிலோ, தொழிற்சாலைகளிலோ நீங்கள் சம்பளம் வாங்கும் சாதாரண ஆசாமிகளாக இருந்தால், சம்பள உயர்வுக்காக அவ்வப்பொழுது கிளர்ச்சிகள் செய்து, முதலாளிகளை நாசூக்காகப் பயமுறுத்தி வந்தால் போதும். பெரிய சம்பளக்காரர்களும் சட்ட சபை அங்கத்தினர்களும் தாங்களே தங்களுடைய சம்பளங்களையும் படி வகையறாக்களையும் உயர்த்திக்கொள்ள சக்தி வாய்ந்தவர்கள்.

ஆனால் நில விஷயம் அப்படியல்ல. பயிர்ச் செயல் ஒரு பெரிய சூதாட்டமாகும். முதலும், உழைப்பும். இயற்கையும், ஒற்றுமையும், நம்பிக்கையும் ஒருங்கே சேர்ந்துதான் உங்களுடைய உணவுப் பண்டங்களாக மாறுகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் மகசூல் கைக்கு வராது. இப்பொழுது நிலச் சட்டங்களும், விதிகளும் சர்க்கார் அறிக்கைகளும் சேர்ந்து விவசாயத் துறையில் தங்களாலான உதவி புரியப் போகின்றன! இது வரையில் நிலச் சொந்தக்காரர்களும் சாகுபடிதார் களும் மட்டில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இனி, வழக்கறிஞர்களும், பெடிஷன் ரைடர்களும், ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்களும், ரெண்டு கோர்ட்டு களும், ரிவின்யூ கோர்ட்டுகளும், ரெண்ட் டிரிபுனல்களும், சமரச அதிகாரிகளும் விவசாயத்துறையில் மிக ஊக்கத் துடனும் முழு கவனத்துடனும் ஈடுபடுவார்கள்!

நிற்க, இப்பொழுது வந்திருக்கும் நிலச் சட்டங்களை கவனிப்போம். நீங்கள் நிலத்தின் சொந்தக்காரராக இருந்து எல்லா நிலங்களையும் சொந்தத்தில் பண்ணை சாகுபடி செய்துவந்தால், உங்களுடைய நிலம் எந்த ஜில்லாவில் இருக்கின்றது? தஞ்சை ஜில்லாவிலும், தென்ஆற்காடு ஜில்லாவில் சில இடங்களிலும் உங்களுக்கு நிலம் இருந்து உங்களிடம் பண்ணையாட்களும் இருந்தால் இப்போது திருத்தி அமைக்கப்பட்டிருக்கும் தஞ்சைப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை மட்டில் நீங்கள் படித்தால் போதும். ஆனால் உங்களுடைய பண்ணைச் சாகுபடி வேலைகளை தாற்காலிகக் கூலி ஆட்களைக் கொண்டு மட்டில் செய்து வந்தாலும் சரி அல்லது உங்க ளுடைய பண்ணை நிலங்கள் வேறு ஜில்லாக்களில் இருந் தாலும் சரி—உங்களுக்கு இதுவரையில் சட்டம் ஒன்றும் வரவில்லை. ஆனால் வரக்கூடும்!

உங்களுடைய சொந்த நிலத்தை நீங்கள் குத்த கைக்கோ சாகுபடிக்கோ விட்டிருந்தால், நீங்கள் தமிழ்

நாட்டில் எங்கிருந்தாலும் இந்த இதழில் அடங்கிய சட்டங்களை நன்ருகக் கவனிக்க வேண்டியது உங்களுடைய கடமையாகும்.

நீங்கள் வேறு ஒருவருடைய நிலத்தைக் குத்தகை அல்லது சாகுபடிக்கு ஒப்புக்கொண்டிருந்தாலும் இச் சட்டங்களை நன்கு கவனிக்கவேண்டும். ஏனென்ருல் எல்லா சாகுபடிதார்களுக்கும் குத்தகைதார்களுக்கும் இச் சட்டங்களால் பிரமாதமான லாபமிருக்கிறதென்ற எண்ணம் வேண்டாம்! வேறு ஒருவருடைய நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து நிலத்தில் இறங்காமலே எல்லா விவசாய வேலைகளையும் கூலியாட்களைக் கொண்டோ பண்ணையாட்களைக் கொண்டோ நீங்கள் விவசாயம் செய்து வந்தால், உங்களுக்கு உதவி செய்யும் சட்டம் ஒன்றுமில்லை. உங்களுக்கு இப் புதுச் சட்டங்களால் பாதுகாப்பும் இல்லை. நீங்கள் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட குத்தகையைக் குறைக்கவும் இச் சட்டங்கள் உங்களுக்கு உதவிபுரியவில்லை. ஆனல் பிறருடைய நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்ட நீங்கள் பிரயாசைப்பட்டு உங்களுடைய சரீர உழைப்பைக் கொண்டே விவசாயம் செய்துவந்தாலும், நிலத்திற்குச் சொந்தக்காரராகி விடலாமென்ற நப்பாசையினலோ, வேறு காரணத்தினலோ, பத்து ஏகருக்கு அதிகமான நன்செய் நிலங்களை விடாப்பிடியாக நீங்கள் உங்கள் வசம் வைத்திருந்தால், நீங்கள் முற்றிலும் ஏமாந்து விட்டீர்கள்! நீங்கள் நிலக்காரருடன் ஒப்புக்கொண்ட குத்தகையைக் கொடுத்துவிட வேண்டும். ''நியாய வாரம்'' என்பது உங்களுக்குக் கிடையாது. உங்களிட மிருப்பது பத்து ஏகருக்குள் இருந்தால் நீங்கள் விழித்துக் கொள்ளலாம். நீங்கள் பயிர் செய்வது என்ன? கரும்பா, வாழையா, வெற்றிலையா? அல்லது யாரோ பயிர் செய்த விலை உயர்ந்த ஒட்டு மாந்தோப்பின் பலன்களை அடையவோ, அல்லது, அடர்ந்த தென்னந்தோப்பில்

குலுங்கும் தேங்காய்களைப் பறித்துக் கொள்ளவோ குத்தகை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்கெல்லாம் நியாய வாரச் சட்டத்தால் தம்படி கூட லாபமில்லை. இதுபோன்ற பல பல நுட்பங்களை இச் சட்ட விளக்கங்களிலிருந்து நீங்களே எளிதில் தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் நிலச் சொந்தக்காரராக இருந்தாலும் சரி, சாகுபடிதாரராக இருந்தாலும் சரி, வீண் விவகாரங்களில் செலவு செய்யாமல் நீங்கள் மிச்சம் செய்த தொகைகளை உங்களுடைய நில வருமானத்துடன் கூட்டிக் கொள்ளுங்கள்!

நியாய வாரச் சட்டம் [1956]

[சென்னை சட்ட சபையால் இயற்றப்பட்ட இச் சட்டத்திற்கு ஜனதிபதி அவர்கள் 29—10—1956 தேதியில் அங்கீகாரம் அளித்து, இச்சட்டமானது 31—10—1956 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கீழே இருப்பது இச்சட்டத்தின் விளக்கமே ஒழிய வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பு அல்ல. சந்தேகங்கள் தோன்றுமிடங்களில் சட்டத்தின் அதிகாரபூர்வமான ஆங்கில வாசகத்தைக்கொண்டே அர்த்தம் செய்துகொள்ள வேண்டும்.]

பீடிகை

சென்னை ராஜ்யத்தில் சில பிரதேசங்களிலுள்ள சாகுபடிதார்கள் நியாயவாரம் கொடுப்பது பற்றி சட்டம் இயற்றுவது யுக்தமாகத் தோன்றுவதால் இச் சட்டம் இயற்றப்பட்டிருப்பதாக பீடிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்டத்தின் பெயரும், அமுலில் இருக்கும் இடங்களும், சட்டம் அமுல் தேதியும்.

(1) இச் சட்டத்திற்குச் சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் நியாயவாரச் சட்டம் 1956 - என்று பெயர்.

செக்ஷன் 1

(2) இச் சட்டமானது 1929-ம் வருடத்திய மலையாளக் குடிவாரச் சட்டம் அமுலில் இருக்கும் மலையாளம் ஜில்லா தவிர பாக்கியுள்ள சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும்.

[குறிப்பு:— 1—11—1956 தேதியில் சென்னை ராஜ்யத்துடன் சேர்ந்த கன்னியாகுமரி ஜில்லாவுக்கும் செங்கோட்டைப் பகுதிக்கும் இச் சட்டம் கிடையாது. ஆனல் அந்த இடங்களுக்கும் இச் சட்டத்தையும் வேறு சென்னைச் சட்டங்களையும்

ஒரு வருடத்திற்குள் விஸ்தரிக்க சென்னை சர்க்காருக்கு ராஜ்யப் புனரமைப்புச் சட்டத்தின் செக்ஷன் 120 என்ற ஷரத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வரையில் அப் பகுதிகளில் முன்பு இருந்த திருவாங்கூர்—கொச்சி ராஜ்யச் சட்டங்களேதான் அமுலில் இருக்கும்.]

(3) இச் சட்டம் 1—10—1956 தேதியில் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும்.

சில சொற்களின் பொருள்

செக்ஷன் 2 (1)

இச் சட்டத்தில் சந்தர்ப்பங்களைப் பொறுத்து வேறு விதமாக அர்த்தம் செய்து கொள்ளவேண்டியதாக இருந்தாலொழிய, கீழே கண்ட சொற்களின் அர்த்தம் பின் வருமாறு:—

விவசாய வருடம் என்பது எது?

(a) "விவசாய வருடம்" (agricultural year) என்பது ஏப்ரல் மாதம் 1-ம் தேதி ஆரம்பமாகும் வருடத்தைக் குறிக்கும். ஆனால் ஒரு ஜில்லா பூராவிலுமோ அல்லது ஜில்லாவின் ஒரு பகுதியிலோ விவசாய வருடம் என்பதை வேறு ஒரு தேதியி லிருந்து கணக்குச் செய்யவேண்டுமென்று ஜில்லா கெஜட்டில் அறிக்கை மூலம் குறிப்பிட ஜில்லா கலெக்டருக்கு அதிகாரம் உண்டு. அப்படிக் குறிப்படும் இடங்களுக்கு "விவசாய வருடம்" என்பது அத் தேதியில் ஆரம்பமாகும் வருடத்தைக் குறிக்கும்.

"சாகுபடி செய்யும் குத்தகைதார்" என்பது யாரைக் குறிக்கும்?

(b) "சாகுபடி செய்யும் குத்தகைதார்" (Cultivating tenant) என்றால் வேறு ஒருவருடைய நிலத்தைக் குத்த கைக்கோ சாகுபடிக்கோ ஒப்புக்கொண்டு, அந்த நிலத்தைத் தம்முடைய அல்லது தம்முடைய குடும்பத்தினருடைய சரீர

உழைப்பையும் சேர்த்துக்கொண்டு சாகுபடி செய்பவரைக் குறிக்கும். குத்தகை அல்லது சாகுபடி ஏற்பாடானது வியக்த மாகவும் இருக்கலாம்; வேறு விதமாகவும் இருக்கலாம். குத்தகை ஏற்பாட்டின்படிக்குள்ள கெடுவுக்குப் பிறகும், சாகுபடி அல்லது குத்தகை நிலங்களைத் தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருப்பவரும் இச் சட்டப்படி சாகுபடி செய்யும் குத்தகை தாராவார். சாகுபடிதார் அல்லது குத்தகைதாருடைய வார்சு களும் இதில் சேர்ந்தவர்களே. ஆனால் நிலக்காரருக்கும் சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு மிடையே இருக்கும் "நடு மனிதர்களும்" அவர்களுடைய வார்சுகளும் இச் சட்டப் படி சாகுபடிதார் அல்லது குத்தகைதார்கள் ஆகமாட்டார்கள்.

[குறிப்பு:— சில இடங்களில் 'சாகுபடிதார்' என்றும் 'பயிர் செயல்காரர்' என்றும், 'குத்தகைதார்' என்றும், திருநெல்வேலி ஜில்லாவில் 'சம்சாரி' என்றும் சொல்லப்படுபவர் களைத்தான் இச் சட்ட விளக்கத்தில் "சாகுபடிதார்" அல்லது "குத்தகைதார்" என்று குறிப்பிடப்படுகிறது.]

"நியாய வாரம்"

(c) "நியாய வாரம்" (Fair Rent) என்பது இச்சட்டப் படி கொடுக்கப்படவேண்டிய வாரத்தைக் குறிக்கும். (நியாய வாரம் எவ்வளவு என்று கீழே செக்ஷன் 4ல் சொல்லப்பட் டிருக்கிறது.)

(d) "தோட்ட நிலம்" (Garden land) என்பது கிணறு களிலிருந்தோ வேறு ஆதாரங்களிலிருந்தோ தண்ணீர் இறைக் கப்பட்டு பாசனம் செய்யப்படும் புன்செய் நிலத்தைக் குறிக்கும்.

(e) "சர்க்கார்" (Government) என்பது (சென்னை) ராஜ்ய சர்க்காரைக் குறிக்கும்.

(f) "நிலச் சொந்தக்காரர்" (Land owner) என்றால் சாகுபடி செய்யும் குத்தகைதாருக்கு சாகுபடி செய்வதற்காக விடப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர் என்று அர்த்தம். நிலச்

சொந்தக்காரருடைய வார்சுகளும், அவரிடமிருந்து பார்த்தியம் கொண்டாடுபவர்களும், அவருடைய பிரதிநிதிகளும், அவர் மூலம் உரிமை பெறுகிறவர்களும் "நிலச் சொந்தக்காரர்" என்பதில் சேர்ந்தவர்களே.

ஒரு நிலத்தின் "சாதாரண மொத்த மகசூல்"—என்றால் என்ன?

(g) "ஒரு நிலத்தின் "சாதாரண மொத்த மகசூல்" (Normal gross Produce) என்றால்—மழையும்
செக்ஷன் 2 (g) பருவக் காலங்களும் சாதாரணமாக இருந்து, அந்த நிலத்தைப் போன்ற அதே நிலைமையில் உள்ளதும், அதே அனுகூலங்களை உடையதுமான அதே வகுப்பு நிலத்தில் அடையக்கூடிய மகசூல்—எனப் பொருள்படும்.

[குறிப்பு:—இச் சட்டத்தில் நுட்பமாக கவனிக்கப்பட வேண்டிய வாசகங்களில் இது ஒன்று. இச் சட்டப்படி சாகுபடிதார் அல்லது குத்தகைதார் நிலச் சொந்தக்காரருக்கு கொடுக்கவேண்டிய வாரம் எவ்வளவு என்று கணக்குச் செய்ய, முதலில் சாகுபடி நிலத்தின் "சாதாரண மொத்த மகசூல்" எவ்வளவு என்று நிர்ணயம் செய்துகொள்ளவேண்டும். குறிப்பிட்ட சாகுபடி நிலத்தில் குறிப்பிட்ட வருடத்தில் விளைந்திருப்பதுதான் "சாதாரண மொத்த மகசூல்" என்பது அல்ல. குறிப்பிட்ட ஒரு வருடத்தில் அச் சாகுபடி நிலத்தின் விளைவு குறைவாக இருந்தாலும், அதிகமாக இருந்தாலும், அதைக் கொண்டு வாரம் கணக்குச் செய்யப்படமாட்டாதென்பதைக் கவனிக்கவும். மழையும் பருவ காலங்களும் சாதாரணமாக இருந்து, சாகுபடி நிலம் எந்த நிலைமையில் எந்த அனுகூலங்களுடன் இருக்கிறதோ அதே நிலைமையில் அதே அனுகூலங்களை உடைய அதே வகை அல்லது வகுப்பு நிலத்தில் எவ்வளவு மாசூல் கிடைக்கக் கூடியதோ அதுதான் இச் சட்டத்தில் "சாதாரண மொத்த மகசூல்" ஆகும். இதில் தான் எவ்வளவு

வீதத்தை சாகுபடிதார் "நியாய வாரமாக" நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டுமென்று இச் சட்டத்தில் 7-வது செக்ஷன் 4ல் சொல்லப்படுகிற தென்பதை கவனிக்கவும்.]

(h) "கொடுக்கப்பட்ட" (paid) என்பதில் "ஒப்புவிக்கப்பட்டது"ம் அடங்கும்.

"ரெண்டு கோர்ட்" — "ரெண்டு டிரிபுனல்"

(i) "ரெண்டு கோர்ட்" (Rent Court) "ரெண்டு டிரிபுனல்" (Rent Tribunal) என்றால் அந்தந்த இடங்களுக்கு அதிகாரம் கொடுத்து இச் சட்டத்தால் அமைக்கப்படும் "ரெண்டு கோர்ட்டு"களையும் "ரெண்டு டிரிபுனல்"களையும் குறிக்கும்.

ஒரு நிலம் நன்செய் நிலமா, புன்செய் அல்லது தோட்ட நிலமா என்பதை எப்படி நிர்ணயம் செய்வது?

ஒரு நிலமானது நன்செய் நிலமா, புன்செய் நிலமா அல்லது தோட்ட நிலமா என்ற பிரச்னை ஏற்பட்டால், எந்தத் தேதியைக் குறித்து அப்பிரச்னை ஏற்படுகிறதோ, அத்தேதியில் உள்ள உண்மையான நிலைமைகளைக் கொண்டு இது நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

செக்ஷன் 2 (2)

சாகுபடிதார், நிலச் சொந்தக்காரர் இவர்களுடைய உரிமைகளும் பொறுப்புக்களும்

நியாய வாரம்:— 1—10—1956 தேதியிலிருந்து சாகுபடிதார் நிலச் சொந்தக்காரருக்கு இச் சட்டப்படிக்கான நியாயவாரத்தைக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறார். மேற்கண்ட நியாய வாரத்தைச் சாகுபடிதாரிடமிருந்து வசூல் செய்ய நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு. ஆனால் சாதாரணமாக

செக்ஷன் 3 (1)

1956-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் அறுவடை செய்யப்பட வேண்டிய மகசூல் சம்பந்தமாகவும் "நியாய வாரம்" பற்றிய இச் சட்ட ஷரத்துக்கள் பொருந்தும்.

சாகுபடிதாரின் முறையற்ற பாசனத்தால் அதிகத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டால், நிலச் சொந்தக்காரரின் உரிமைகள்

செக்ஷன் 3 (2)

(சாகுபடிதாரானவர் சாகுபடி நிலத்திற்கு) முறை தவறி நீர்ப்பாசனம் செய்த காரணத்தினல் (சர்க்காரால்) அதிகத் தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டால், நிலத்தின் சொந்தக்காரர் இரண்டில் ஒன்று அவர் இஷ்டப் படி செய்யலாம். அதாவது மகசூலில் தம்முடைய பாகத்தை எடுத்துக்கொண்டு, அதிகத் தண்ணீர்த் தீர்வையில் அதே வீதாசாரப்படிக்கான பாகத்தை அவர் கொடுத்துவிட வேண்டும். அல்லது முறையற்ற நீர்ப்பாசனம் செய்யப்படாவிட்டால் தமக்கு என்ன வாரம் கிடைக்குமோ அதை மட்டில் வாங்கிக் கொள்ளலாம்; அப்படி அவர் செய்தால் அதிகத் தண்ணீர் தீர்வை ஜாடாவையும் சாகுபடி தாரே பொருத்துக்கொள்ள வேண்டும்.

சாகுபடிதார் அசட்டையாலோ, தவறுதலாலோ யாதொரு பயிரும் சாகுபடி செய்யாவிட்டாலும் அவரிடமிருந்து நியாய வாரத்தை வசூல் செய்ய நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு.

செக்ஷன் 3 (3)

சாகுபடிதார் அல்லது குத்தகைதாரானவர் அசட்டை யாலோ, தவறுதலாலோ நிலத்தில் யாதொரு பயிறும் சாகுபடி செய்யாமலே இருந்துவிட்டாலும் சரி பாதகமில்லாமலே, சாகுபடிதாரிடமிருந்து நியாயவாரத்தை வசூல் செய்ய நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு.

[குறிப்பு:—இந்த ஷரத்தும் நுட்பமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு ஷரத்தாகும். சாகுபடிதாரானவர் சாகுபடி நிலத்தைத் தரிசுபோட்டு விட்டாலும் அவர் நிலச்சொந்தக் காரருக்கு இச்சட்டப்படி "நியாய வாரம்" கொடுக்கவேண்டிய கடமை போய்விடாது. "நியாய வாரம்" என்பது "சாதாரண மொத்த மகசூலின்" ஒரு பாகமாகும் என்பதையும், "சாதாரண மொத்த மகசூல்" என்பது குறிப்பிட்ட வருடத்தில் சாகுபடி நிலத்தில் என்ன விளைந்திருக்கிறது என்பதை மட்டில் ஆதாரமாக வைத்துக்கொள்ளாமலே நிர்ணயம் செய்யப்படும் என்பதையும் முன்பே கவனித்தோம்.]

விதை, உழவு, எரு, அறுவடை, போரடி உள்பட சாகுபடிக்கான எல்லாச் செலவுகளையும் சாகுபடிதாரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

செக்ஷன் 3 (4) (பம்பு செட்டு சம்பந்தமான) கீழே செக்ஷன் 4 (2) ஷரத்தில் கண்ட விலக்கு நிபந்தனைக்குட்பட்டு, விதை, உழவு, எருப் போடுதல், அறுவடை செய்வது, போரடிப்பது உள்பட சாகுபடி செய்வதற்கான எல்லாச் செலவுகளையும் சாகுபடிதாரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

[குறிப்பு:—தஞ்சாவூர் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 8 என்ற ஷரத்தில் நெல்லுக்கு அறுவடை போரடி இவைகளுக்கான கூலிச் செலவுகளும், மற்ற தானியங்களுக்கு அதுபோன்ற செலவுகளும் போக பாக்கி மொத்த மகசூலில்தான் நிலச்சொந்தக்காரருக்கு 5ல் 3 பாகமும் சாகுபடிதாருக்கு 5ல் 2 பாகமும் உண்டென்று கண்டிருந்தது. இது சம்பந்தமான தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் இப்போது ரத்து செய்யப்பட்டு விட்டபடியால் தஞ்சைச் சட்ட இடங்கள் உள்பட எல்லா இடங்களிலும் இந்த ஷரத்தின்படி அறுவடை போரடி இச் செலவுகளையும் சாகுபடிதாரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அச்செலவுகளையும் சாகுபடிதார் தமக்குக் கிடைக்கும் வீதத்திலிருந்து பொருத்துக்கொள்ள வேண்டியதாகும் என்பதைக் கவனிக்கவும்.]

சர்க்கார் கிஸ்தி, செஸ் இவைகளை நிலச் சொந்தக்காரர் கொடுக்கவேண்டும்.

செக்ஷன் 3 (5)

நிலம் சம்பந்தமாய் சர்க்காருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய எல்லாத் தொகைகளையும் நிலச் சொந்தக்காரரே கொடுக்கக் கடமைப் பட்டவராவார். ஆனால் சாகுபடிதாரே கொடுக்க வேண்டுமென்று இச் சட்டத்தில் வியக்தமாகக் கண்டிருக்கும் பொதுக் கட்டணங்களை சாகுபடிதாரிடமிருந்து வசூல் செய்துகொள்ள நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு.

மூலதனச் செலவுகள்

செக்ஷன் 3 (6)

நிலத்தையும் கிணறுகளையும் நல்ல நிலைமையில் வைத்திருப்பதற்கான மூலதனச் செலவுகளை நிலச் சொந்தக்காரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நியாய வாரத்திற்கு மேற்கொண்டு அதிகப்படியான தொகையோ, பண்டங்களோ, ஊழியமோ, கால் நடைகளின் இலவச உபயோகமோ கொடுக்கும்படி நிலச் சொந்தக்காரர் கேட்கவும் நிபந்தனை விதிக்கவும் கூடாது

செக்ஷன் 3 (7)

1955-ம் வருடத்திய சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்ட ஷரத்துக்களுக்குட்பட்டு இச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு எந்த நிலச் சொந்தக்காரரும் (1) நியாய வாரத்திற்கு அதிகமான தொகையைத் தமக்குச் சாகுபடிதார் கொடுக்க வேண்டுமென்றோ, அல்லது இச் சட்டத்தில் சாகுபடிதார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கண்டிருக்கும் பொதுக் கட்டணங்கள் எவ்வளவோ அதற்கு அதிகமான தொகையைச் சாகுபடிதார் தமக்குக் கொடுக்கவேண்டுமென்றோ, (2) நியாய வாரத்தைத் தவிர சாகுபடிதாரானவர் தமக்கு அதிகப்படியாகப் பண்டங்களையோ சாமான்களையோ கொடுக்க வேண்டுமென்றோ, (3) சாகுபடிதார்

வேலை செய்ய வேண்டுமென்றோ அல்லது சாகுபடிதாருடைய கால்நடைகளைத் தாம் இலவசமாக உபயோகித்துக் கொள்ளலாமென்றோ—நிலச் சொந்தக்காரர் கேட்கவும் கூடாது, ஏற்பாடு செய்துகொள்ளவும் கூடாது.

[குறிப்பு:—1956ல் திருத்தி அமைக்கப்பட்ட 1955ம் வருடத்திய சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத்தில், நிலச் சொந்தக்காரர் சாகுபடிதாரிடமிருக்கும் நிலத்தைத் தாமே சொந்த சாகுபடி செய்வதற்காகத் திருப்பிக் கேட்டால், அவர் திருப்பி அடையக்கூடிய நிலத்திற்கு 27—9—1955க்கு முன்பு உள்ள வாரத்தைக் கொடுப்பதாக சாகுபடிதார் ஒப்புக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இது நியாய வாரத்திற்கு அதிகமாக இருந்தாலும் செல்லும், என்பதற்காகத்தான் அச் சட்டம் இந்த செக்ஷனில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.]

ஆனால் நஷ்ட ஈடு கேட்கலாம்

நிலத்திறகோ அல்லது நிலம் சாகுபடிக்குக் கொடுக்கப்பட்ட காலத்தில் நிலத்தில் இருந்த எதற்குமோ சாகுபடிதாரால் ஏதாவது சேதம் அல்லது கெடுதி ஏற்பட்டிருந்தால், அதற்குச் சாகுபடிதாரிடமிருந்து நஷ்ட ஈடு கேட்க நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு. இந்த செக்ஷனில் (செக்ஷன் 3ல்) கண்டிருக்கும் எதவும் நிலச் சொந்தக்காரருடைய மேற்கண்ட உரிமையைப் பாதிக்காது.

செக்ஷன் 3
விவரணம் 1

நியாய வாரத்திற்குக் குறைவாக வாரம் கொடுக்கப் பட்டால், வேலை பற்றியும், கால்நடை இலவச உபயோகத்தைப் பற்றியும் ஏற்பாடு செய்து கொள்ளுவது செல்லும்

மேலே செக்ஷன் 3 (7) என்ற ஷரத்தில் சாகுபடிதார் கொடுக்கவேண்டிய நியாய வாரத்திற்கு அதிகப்படியாக, சாகுபடிதாரானவர் வேலை செய்யவேண்டுமென்றோ, அல்லது சாகுபடிதாருடைய கால்நடைகளை இலவசமாக நிலச் சொந்தக்காரருடைய உபயோகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்றோ நிலச்

செக்ஷன் 3
விவரணம் 2

சொந்தக்காரர் கேட்கவும் ஏற்பாடு செய்து கொள்ளவும் கூடா தென்று சொல்லப்பட்டது. ஆனல் ஒப்பந்தப்படி நியாய வாரத்திற்குக் குறைவாக சாகுபடிதார் வாரம் கொடுத்து வந்தால், அச் சாகுபடிதாருக்கு மேலேகண்ட செக்ஷன் 3 (7) என்ற ஷரத்தின் நிபந்தனையானது பொருந்தாது. (அதாவது நியாய வாரத்திற்குக் குறைவாக வாரம் கொடுத்தவரும் சாகுபடிதார்கள், அதிகப்படியாக ஏதாவது சேவை செய்ய வேண்டுமென்றே, அல்லது அவருடைய கால்நடைகளை இலவச மாக நிலச் சொந்தக்காரருடைய உபயோகத்திற்குக் கொடுத்து வர வேண்டுமென்றே ஏற்பாடு செய்துகொள்ள இச் சட்டத்தில் தடை இல்லை.)

மூல்கெனிதார் கொடுக்கவேண்டிய தொகை

செக்ஷன் 3 (8)

சாகுபடிதாரிடமிருந்து மூல்கெனிதாருக்குக் கிடைக்க வேண்டிய வாரம் இச் சட்டத்தால் குறைந்தால் அதே வீதாசாரப்படி அவர் மூல்காருக்குக் கொடுக்கவேண்டிய குத்தகையும் குறையும். (இந்த ஷரத்து தென் கன்னடம் ஜில்லா பற்றியது.)

உள்குத்தகைக்கு விட்டிருப்பவர்கள், தங்களுடைய குத்தகையை ரத்து செய்துகொள்ள உரிமை உண்டு

செக்ஷன் 3 (9)

ஒருவரிடம் நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண் டிருப்பவர் அந் நிலத்தை உள் குத்தகை அல்லது சாகுபடிக்கு விட்டிருந்து, அச் சாகுபடிதாரிடமிருந்து தமக்குக் கிடைக்கக் கூடிய வாரம் அல்லது குத்தகையானது இச் சட்டத்தால் குறைந்துபோய் விட்டால், அவர் தாம் யாரிடம் நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டாரோ அவருக்கு நோட்டீசுக் கொடுத்து அதில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து தம்முடைய குத்தகை பாத்தி யத்தை விட்டுக் கொடுத்து ரத்து செய்துகொள்ள அவருக்கு உரிமை உண்டு.

நிலத்தில் உரம் போடுவதற்காக நிலச் சொந்தக்காரர் சாகுபடிதாருக்குக் கடன் கொடுத்து சாகுபடிதாரின் மகசூல் பாகத்திலிருந்து கடனை வசூல் செய்து கொள்ளலாம்

செக்ஷன் 3 (10)

நிலச் சொந்தக்காரர், தம்முடைய சாகுபடிதாருக்குத் தம்முடைய நிலத்தில் உரம் போடுவதற்கு அவசியமான தொகையைக் கடனாகக் கொடுக்கலாம். அக் கடனானது மகசூலில் சாகுபடிதாருடைய பாகத்திலிருந்து முதல் பொருப்பாகக் கொடுக்கப்பட வேண்டியதாகும். ஆனால் சாகுபடித் தரத்தை உயர்த்துவதற்காக அமைக்கப்படும் ஒரு கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினரல்லாத சாகுபடிதார்களுக்குத்தான் நிலச் சொந்தக்காரர் மேற்கண்டபடி கடன் கொடுத்து வசூலித்துக் கொள்ளலாம்.

சாகுபடிதாரின் சம்மதத்தின் பேரில் நன்செய் அல்லது தோட்ட நிலங்களுக்கு ரசாயன உரமும் புண்ணாக்கும் போட்டு அதற்கான செலவை சாகுபடிதாரிடமிருந்து வசூல் செய்துகொள்ள நிலக்காரருக்கு உரிமை உண்டு

செக்ஷன் 3 (11)

மேலே செக்ஷன் 3 (4) என்ற ஷரத்திலும் செக்ஷன் 3 (10) என்ற ஷரத்திலும் எவ்விதமாகக் கண்டிருந்தபோதிலும், நிலச் சொந்தக்காரரானவர் சாகுபடிதாரின் சம்மதத்தின் பேரில், நன்செய் நிலங்களுக்கும், தோட்ட நிலங்களுக்கும், சாதாரண மொத்த மகசூலில் பத்தில் ஒரு பங்கின் மதிப்புக்கு அதிகப்படாத ரசாயன உரம் புண்ணாக்கு இவற்றைப் போட்டு, அதன் கிரயத்தை சாகுபடிதாரிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம். இந்த ஷரத்தின்படி சாகுபடிதார் கொடுக்கவேண்டிய தொகை

யானது, அவர் இச்சட்டப்படி கொடுக்க வேண்டிய நியாய வாரம் தவிர அதிகப்படியான தொகையாகும்.

நியாய வாரம் என்பது எவ்வளவு?

கீழே (செக்ஷன் 4 (2)ல்) கண்ட ஷரத்துக்குட்பட்டு (சாகுபடிதாரரானவர் நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டிய) நியாய வாரம் என்பது அடியில் கண்ட

செக்ஷன் 4 (1) வாரமாகும். அதாவது:—(i) நன்செய் நிலங்களுக்குச் சாதாரண மொத்த மகசூலில் 40 சதவிகிதம் (100க்கு 40 பங்கு) அல்லது அதன் ரொக்க மதிப்புத்தான் நியாய வாரமாகும். (ii) இறவை நன்செய் நிலங்களுக்கு, (அதாவது சாதாரண நீர்ப்பாசனத்துடன் இறவைப் பாசனமும் கூடிய நன்செய் நிலங்களுக்கு)ச் சாதாரண மொத்த மகசூலில் 35 சதவிகிதம் அல்லது அதன் ரொக்க மதிப்பே நியாய வாரமாகும். (iii) மற்ற வகுப்பு நிலங்களுக்குச் சாதாரண மொத்த மகசூலில் $33\frac{1}{3}$ சதவிகிதமே நியாய வாரமாகும்.

விவரணம்:—ஒவ்வொரு அறுவடையிலும் எல்லாப் பயிர்களின் வைக்கோல் அல்லது தட்டையில் 5ல் 1 பங்கு நிலச் சொந்தக்காரருக்கு உண்டு.

[குறிப்பு:—நிலத்திலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு மகசூலிலும், எத்தனை போகமாக இருந்தாலும் சரி; உளுந்து பயறு போன்ற இடைக்காலப் பயிர்களின் மகசூலிலும் சரி மேற்கண்டபடி நியாய வாரம் கொடுக்கப்பட வேண்டுமென்பதைக் கவனிக்கவும்.]

குழாய் (பம்ப் செட்) பாசன நிலங்களுக்கு நியாய வாரம்

மேலே (ii) (iii) ஷரத்துக்களில் கண்ட நிலங்களுக்கு, அதாவது இறவை நன்செய் நிலங்களுக்கும், நன்செய் அல்லாத

மற்ற வகுப்பு நிலங்களுக்கும், நிலச் சொந்தக்கார
செக்ஷன் ருடைய செலவில் 'பம்பு செட்' அமைக்கப்பட்டு
4 (2) அதன் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டால்,
அந் நிலங்களுக்கு மேலே கண்ட நியாய வார
மானது 40 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

ஆனல் பம்பு செட்டை ஓட்டும் செலவு சாகுபடிதாருடைய தாகும்; பம்பு செட்டைப் பழுது பார்க்கும் (ரிபேர் செய்யும்) செலவு நிலச் சொந்தக்காரருடையதாகும். பம்பு செட்டு வைத்துக்கொடுப்பது நிலச் சொந்தக்காரரின் இஷ்டத்தைப் பொறுத்ததாகும்.

நியாய வாரத்தைவிட ஒப்பந்தவாரம் குறைவாக இருந்தால்

ஒரு குத்தகை அல்லது சாகுபடி ஏற்பாட்டின்படி
சாகுபடிதார் கொடுக்கவேண்டிய வாரமானது
செக்ஷன் மேலே கண்ட ஷரத்துக்களின்படி கொடுக்கப்பட
4 (3) வேண்டிய நியாய வாரத்தைவிடக் குறைவாக
இருந்தால், ஒப்பந்தக் கெடு முடியும் வரையில்
அக் குறைந்த ஒப்பந்த வாரமேதான் கொடுக்கப்பட வேண்டிய தாகும்.

வாரத்தை ரொக்கமாகவோ அல்லது தானியம் அல்லது பண்டமாகவோ கொடுப்பது பற்றி

ஒரு நிலத்திற்காகக் கொடுக்கப்பட வேண்டிய நியாய வாரத்தை ரொக்கமாகக் கொடுப்பதா; அல்லது தானியம்
அல்லது பண்டமாகக் கொடுப்பதா; அல்லது ஒரு
செக்ஷன் பாகத்தை ரொக்கமாகவும் ஒரு பாகத்தைத்
5 (1) தானியம் அல்லது பண்டமாகக் கொடுப்பதா;
என்பதைப்பற்றி நிலச் சொந்தக்காரரும் சாகுபடி
தாரும் எவ்விதம் ஒப்புக்கொண்டு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்களோ, அவ்விதமே கொடுக்கப்பட வேண்டும்.

அவ்வித ஏற்பாடு ஒன்றும் இல்லாவிட்டால்

மேற்கண்டபடி நிலச் சொந்தக்காரரும் சாகுபடிதாரும் நியாய வாரமானது எப்படிக் கொடுக்கப்பட வேண்டுமென்று யாதொரு ஏற்பாடும் செய்துகொள்ளா விட்டால் சாகுபடி தாரானவர் நியாய வாரத்தை தம்முடைய விருப்பப்படி மேற் கண்ட விதங்களில் ஏதாவது ஒரு விதத்தில் கொடுக்கலாம்.

தாம் எவ்விதம் நியாய வாரத்தைக் கொடுக்கப் போகிறார் என்பதை மூன்று மாதங்களுக்குள் சாகுபடி தார் தெரிவித்துவிட வேண்டும்

இச் சட்டம் முதல் முதலாக சென்னை சர்க்கார் கெஜட் டில் பிரசுரம் செய்யபட்ட தேதியில், அதாவது 31—10—1956 தேதியில், அமுலில் உள்ள குத்தகைகள் சம்பந்தப்பட்ட வரையில், அத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளும்— அதாவது 31—1—1957 தேதிக்குள்ளும்; பிறகு ஏற்படும் குத்தகைகள் சம்பந்தப்பட்ட வரையில் அக் குத்தகை அல்லது சாகுபடி ஏற்பாடு ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக் குள்ளும் சாகுபடிதாரானவர் தம்முடைய விருப்பத்தை (அதாவது தாம் நியாய வாரத்தை எவ்விதம் கொடுக்க விரும்பு கிறார் என்பதை) தெரிவித்துவிட வேண்டும்.

மேற்கண்டபடி சாகுபடிதார் தெரிவிக்காவிட்டால், நிலச் சொந்தக்காரருடைய இஷ்டப்படி நியாய வாரத்தைக் கொடுக்கவேண்டும்

மேற்கண்டபடி மூன்று மாதங்களுக்குள் சாகுபடிதாரானவர் தம்முடைய விருப்பத்தைத் தெரிவிக்காவிட்டால், நியாய வாரம் எவ்விதம் கொடுக்கப்படவேண்டும், (ரொக்கமாகவா, பண்டமாகவா) என்பதைக் குறிப்பிட நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு. நிலச் சுவான்தார் தம்முடைய இஷ்டத்தைச் சாகுபடிதாருக்கு எழுத்து மூலம் நோட்டீஸ் கொடுத்து தெரிவிக்க வேண்டும்.

இருவரும் சம்மதித்தாலொழிய ஏற்பாட்டை மாற்ற முடியாது

மேலும் சாகுபடிதாரரோ, அல்லது நிலச் சொந்தக்காரரோ இந்த ஷரத்தின்படி தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்த பிறகு, மறுபடியும் இருவரும் சம்மதித்தாலொழிய, அதை மாற்ற முடியாது.

ஆனால் நெல் பயிர் சம்பந்தப்பட்ட வரையில் வாரத்தை நெல்லாகவே அளக்கவேண்டுமென்று நிலச் சொந்தக்காரர் வற்புறுத்தலாம்

மேலும், நிலத்தில் சாகுபடி செய்திருப்பது நெல் பயிராக இருந்தால், தம்முடைய வாரத்தை நெல்லாகவே அளக்க வேண்டுமென்று வற்புறுத்த நிலச் சொந்தக்காரருக்கு உரிமை உண்டு.

பருவ காலக் கோளாரால் மொத்த மகசூல் கால் பங்குக்கு மேல் குறைந்தால் — நியாய வாரமும் வீதாசாரமாகக் குறையும்

எப்பொழுதாவது, பருவகால நிலைமைகள் பிரதிகூலமாக இருந்தது காரணமாக, ஒரு பயிரின் மொத்த மாசூலானது 25 சதவிகிதத்திற்கு மேல் (அதாவது கால் பங்குக்கு மேல்) குறைந்தால், அந்த நிலத்திற்காக அக் காலத்திற்குச் சாகுபடிதார் கொடுக்க வேண்டிய நியாய வாரத்திலும் வீதாசாரமாகத் தள்ளிக்கொடுக்க நிலச் சொந்தக்காரர் கடமைப்பட்டிருக்கிறார்.

செக்ஷன் 5 (2)

இந்த செக்ஷன்படி நியாய வாரத்தில் தள்ளுபடி செய்யப் பட வேண்டுமென்று ரெண்டு கோர்ட்டுக்குச் சாகுபடிதார் மனுப் போட்டால், அம் மனுவை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்போ,

அல்லது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு முன்போ சில நிபந்தனைகளை ஏற்படுத்த ரெண்டு கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. அதாவது, சாகுபடிதார் வாரம் கொடுக்கவேண்டிய கெடுவும் வந்து, அவர் அதில் கொடுக்கவேண்டியதாக ஒப்புக்கொள்ளும் வாரத்தைக் கோர்ட்டில் கட்டவேண்டுமென்றோ அல்லது அச்சந்தர்ப்பத்தில் தமக்கு நியாயம் என்று தோன்றுகிற நிபந்தனைகளை விதிக்கவோ, ரெண்டு கோர்ட்டாருக்கு அதிகாரம் இருக்கிறது.

நியாய வாரம் என்பது ஐந்து வருடங்களுக்கு அப்படியே இருக்கும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் நியாய வாரத்தைக் குறைக்கவும் அதிகரிக்கவும் இடம் இருக்கிறது.

செக்ஷன் 6 — இச் சட்டப்படி ஒரு நிலத்திற்கு நியாய வாரம் எவ்வளவு என்பது தீர்மானம் செய்யப்பட்ட பிறகு அதே நியாய வாரம் ஐந்து வருடங்களுக்கு அமுலில் இருக்கும்.

ஆனால் வெள்ளத்தாலோ, அல்லது சாகுபடிதாரால் தடுக்க முடியாத வேறு காரணங்களினாலோ, நிலத்திற்குச் சேதம் ஏற்பட்டு, அந் நிலம் முழுமையுமோ அல்லது அதன் ஒரு பாகமோ சாகுபடி செய்ய வாயக்கில்லாமல் போய்விட்டால், சாகுபடிதார் ரெண்டு கோர்ட்டுக்கு மனுப் போடுவதின் பேரில், அந் நிலத்தின் நியாய வாரத்தைக் குறைக்க ரெண்டு கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

மேலும், நிலச் சொந்தக்காரராலோ அல்லது அவருடைய செலவிலோ நிலத்தில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக அந் நிலத்தின் மகசூல் அதிகரித்துவிட்டால், நிலச் சொந்தக்காரர் ரெண்டு கோர்ட்டுக்கு மனுப் போடுவதின்பேரில், அந் நிலத்திற்காகக் கொடுக்கப்பட வேண்டிய நியாய வாரத்தை அதிகப்படுத்தவும் ரெண்டு கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

மகசூலைக் களத்துமேட்டிலேயே பிரித்துக் கொள்ளவேண்டும்.

பிரித்து கொள்ளவேண்டிய மகசூலானது தானியமாக இருந்தால், அதைக் களத்துமேட்டிலேயே நிலச்
செக்ஷன் 7 சொந்தக்காரரும் சாகுபடிதாரும் பிரித்துக் கொள்ள வேண்டும். உரிய காலத்தில் மகசூலை முறைப்படி பிரித்துக்கொள்ளுவதைத் தடுக்கும் விதத்தில் மகசூலின் எந்தப் பாகமும் அகற்றப்படக் கூடாது.

"ரெண்ட் கோர்ட்டு," "ரெண்ட் டிரிபுனல்" அமைப்பு

(1) இச் சட்டத்திற்காக "ரெண்ட் கோர்ட்டு"களையும் "ரெண்டு டிரிபுனல்"களையும் அறிக்கை மூலம் அமைக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது. ஒவ்வொரு
செக்ஷன் 8 ரெண்ட் கோர்ட்டுக்கும் ரெண்ட் டிரிபுனலுக்கும் எந்த இடங்களில் அதிகாரம் உண்டென்று இவைகளை அமைக்கும் அறிக்கையிலேயே குறிப்பிடப்படும்.

(2) ரெண்ட் கோர்ட்டுக்குத் தலைமை வகிக்க தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார். ரெண்ட் டிரிபுனலுக்குத் தலைமை வகிக்க ஜில்லா முன்சீப் அந்தஸ்துக்குக் குயைாத ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார்.

ரெண்ட் கோர்ட்டுக்கு மனுக்கள். ரெண்ட் டிரிபுனலுக்கு அப்பீல்.

(1) நிலச் சொந்தக்காரரும் சாகுபடிதார் அல்லது குத்தகைதாரும் செய்துகொண்ட ஒப்பந்தம் எப்படி இருந்த போதிலும் சரி; அல்லது ஒரு கோர்ட்டின்
செக்ஷன் 9 டிக்ரியோ, உத்தரவோ எப்படி இருந்தபோதிலும் சரி, நியாய வாரத்தை நிர்ணயம் செய்யவும், இச் சட்டத்தால் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கவும்

ரெண்ட் கோர்ட்டுக்கு மனுப்போட நிலச் சொந்தக்காரருக்கும் உரிமை உண்டு; சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கும் உரிமை உண்டு.

(2) ரெண்ட் கோர்ட்டின் தீர்ப்பின் பேரில் ரெண்ட் டிரிபுனலுக்கு அப்பீல் உண்டு. எவ்வளவு காலத்திற்குள் அப்பீல் செய்யப்பட வேண்டுமென்று விதிகள் செய்யப்படும். ஹை கோர்ட்டாரின் ரிவிஷன் அதிகாரத்திற்குட்பட்டு, ரெண்ட் டிரிபுனல்களின் தீர்ப்பே முடிவானதாகும்.

செலவு தொகை கொடுக்கும்படி தீர்ப்பு செய்யவும் ரெண்ட் கோர்ட்டுக்கும் ரெண்ட் டிரிபுனலுக்கும் அதிகாரம் உண்டு

செக்ஷன் 10

ரெண்ட் கோர்ட், ரெண்ட் டிரிபுனல் இவர்களிடம் நடக்கும் நடவடிக்கைகளுக்காகவும் அவை சம்பந்தமாகவும் ஏற்படும் செலவு தொகைகளைப் பற்றி யுக்தமான உத்தரவுகள் பிறப்பிக்க ரெண்ட் கோர்ட்டுக்கும் ரெண்ட் டிரிபுனலுக்கும் அதிகாரம் உண்டு.

ஹைகோர்ட்டார் பரிசீலனை (ரிவிஷன்) செய்யலாம்

செக்ஷன் 11

ரெண்ட் டிரிபுனல்கள் சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் 115-வது செக்ஷனில் கண்டபடி, ஹைகோர்ட்டுக் குட்பட்ட கோர்ட்டுகளாக பாவிக்கப்படும். ரெண்ட் டிரிபுனல்களின் உத்தரவுகளைப் பரிசீலனை (ரிவிஷன்) செய்ய ஹைகோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு தாலூக்காவிலும் நெல் முதலிய பிரதான தானியங்களின் சராசரி விலை என்ன என்பதுபற்றி ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். இந்த விலைப்படியே நியாய வாரம் கொடுக்கப்பட வேண்டும்

(1) ஒவ்வொரு ஜில்லாவிலும் பயிர் செய்யப்படும் முக்கியமான பயிர்கள் சம்பந்தமாய் அவைகளுக்கு ஒவ்வொரு தாலூக்காவின் தலைநகரிலும் முந்திய மூன்று மாதங்களில் நிலவி வந்த சராசரி மார்க்கெட் விலை என்ன என்பதை ஒவ்வொரு வருடமும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் இந்த மாதங்களில் ஜில்லா கலெக்டர், ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்ய வேண்டும்.

செக்ஷன் 12

(2) இச்சட்டப்படி சாகுபடிதார் அல்லது குத்தகைதார் கொடுக்கவேண்டிய நியாய வாரத்தின் ரொக்க மதிப்பை நிர்ணயம் செய்யவேண்டியிருந்தால் கீழே கண்டபடி நிர்ணயம் செய்ய வேண்டும். அதாவது ஜில்லா கெஜட்டில் சராசரிவிலை பிரசுரம் செய்யப்படும் பயிர்களுக்கு, நியாய வாரம் கொடுக்கப்பட வேண்டிய தேதிக்கு முன்பு, (நிலமிருக்கும்) தாலுக்காவின் தலைநகரில் அப்பயிரின் சராசரி விலை என்ன என்று ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதோ அதே விலைப்படி கணக்குச் செய்து நியாய வாரம் கொடுக்கப்பட வேண்டும். ஜில்லா கெஜட்டில் விலை பிரசுரம் செய்யப்படாத பயிர்களுக்கு, நிலச் சொந்தக்காரரும் சாகுபடிதாரும் விலை என்ன என்று ஒப்புக்கொண்டிருந்தால் அதன்படி கணக்குச் செய்து நியாய வாரத் தொகை கொடுக்கப்பட வேண்டும். இருவரும் விலையைப் பற்றி ஒப்புக்கொள்ளாவிட்டால், ரெண்ட் கோர்ட்டாருக்கு நியாயமென்றும் சரியானதென்றும் தோன்றும் விலைப்படி கணக்குச் செய்யப்பட வேண்டும்.

இச்சட்டத்திற்கு முரணுக இருக்கும் ஒப்பந்தங்களும், மற்ற சட்டங்களும், பழக்கவழக்கங்களும் கோர்ட் டிக்ரி, உத்தரவுகளும் செல்லமாட்டா.

இதற்கு முன் ஏற்பட்ட சட்டங்களோ, பழக்கவழக்கங்களோ, ஒப்பந்தங்களோ, கோர்ட்டுகளின் டிக்ரி செக்ஷன் 13 அல்லது உத்தரவுகளோ வேறு விதமாக இருந்த போதிலும் பாதகமில்லாமலே இச்சட்ட ஷரத்துக்களே அமுலில் இருக்கும்.

சொந்த நிலமோ, சாகுபடி நிலமோ, இரண்டும் சேர்ந்தோ ஒரு வேலிக்கு ($6\frac{2}{3}$ ஏகருக்கு) மேல் வைத்திருக்கும் சாகுபடிதார்களுக்கு இச் சட்டம் கிடையாது.

ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்குச் சொந்தமாக ஒரு வேலிக்கு ($6\frac{2}{3}$ ஏகருக்கு) மேற்பட்ட நஞ்சை நிலம் இருந்தாலும் சரி; அல்லது அவர் சொந்தக்காரர் செக்ஷன் 14 (1) முறையிலோ, சாகுபடிதார் அல்லது குத்தகைதார் என்ற முறையிலோ அல்லது இரண்டு முறையிலும் சேர்ந்தோ, ஒரு வேலிக்கு மேற்பட்ட நன்செய் நிலத்தை சாகுபடி செய்தாலும் சரி, அச் சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு இச் சட்டம் கிடையாது.

ஆனுல் 10 ஏகருக்குள் சாகுபடி செய்பவர்களுக்கு மட்டில் ஒரு சலுகை.

மேலே செக்ஷன் 14 (1) ஷரத்தில் கண்டபடி ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்குச் சொந்தமாக ஒரு

செக்ஷன் 14 (2)

வேலிக்குமேல் ($6\frac{2}{3}$ ஏகருக்குமேல்) நன்செய் நிலம் இருந்தோ, அல்லது சொந்தக்காரர் முறையிலோ, சாகுபடிதார் முறையிலோ, அல்லது இரண்டு முறையிலுமோ சேர்த்து அவர் சாகுபடி செய்யும் நிலம் ஒரு வேலிக்கு மேற்பட்ட நன்செய் நிலமாக இருந்தோ, ஆனால் அவரிடமிருப்பது 10 ஏகருக்கு மேற்படாத நன்செய் நிலமாக இருந்தால், அவ்வித சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு ஒரு சலுகை உண்டு. அதாவது அவ்வித சாகுபடிதார் அல்லது குத்தகைதாரானவர் 1957-ம் வருடத்தில் முடிவடையும் விவசாய வருடத்திற்குள் (அதாவது 31-3-1957 அல்லது அந்த ஜில்லா கலெக்டர் "விவசாய வருடம்" முடிவடையும் தேதியை வேறாகக் குறிப்பிட்டிருந்தால் அத்தேதிக்குள்) தம்மிடமிருக்கும் அதிகப்படி நிலத்தை வேண்டாமென்று விட்டுவிடலாம். அதாவது எவ்வளவு சாகுபடி அல்லது குத்தகை நிலத்தை விட்டுவிட்டால் தமக்கு இச்சட்டப்படி அனுகூலங்கள் கிடைக்குமோ அந்த அளவு நிலத்தை விட்டுவிடலாம். நிலச் சொந்தக்காரருக்கு எழுத்து மூலம் நோட்டீசு அனுப்புவதன் மூலம் மேற்கண்டபடி அதிக நிலத்தைச் சாகுபடிதார் விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்ட சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு 1957ல் முடிவடையும் விவசாய வருடக் கடைசி வரையில் இச்சட்டத்தால் அளிக்கப்படும் எல்லா அனுகூலங்களும் உண்டு. அத்தேதிக்குப் பிறகு, ஒரு வேலிக்கு அதிகப்படியாக இருக்கும் நிலத்தை மேற்கண்டபடி அவர் விட்டுவிட்டால்தான் இச்சட்ட அனுகூலங்கள் அவருக்கு உண்டு.

சாகுபடிதாரிடமிருப்பது புன்செய் அல்லது தோட்ட நிலமாக இருந்தால் எப்படி கணக்குச் செய்வது?

ஒருவருக்குச் சொந்தமாகவோ அல்லது சாகுபடிதார் அல்லது குத்தகைதார் என்ற முறையிலோ எவ்வளவு நிலம்

இருக்கிறதென்று கணக்குச் செய்ய, மூன்று ஏகர் செக்ஷன் புன்செய் நிலம் அல்லது $1\frac{1}{2}$ ஏகர் தோட்ட நில
14 (3) மானது 1 ஏகர் நன்செய் நிலத்திற்குச் சமமானதென்று வைத்துக்கொண்டு அவரிடமிருக்கும் நன்செய், புன்செய், தோட்ட நிலம் எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்குச் செய்யவேண்டும்.

[குறிப்பு:— செக்ஷன் 14ல் கண்ட ஷரத்தும் மிக நுட்பமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு ஷரத்தாகும். இந்த ஷரத்தில் கண்ட விஷயங்களை அடியில் கண்ட உதாரணங்களைக் கொண்டு விளக்கம் செய்யலாம்:—

உதாரணம் (1) ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்குச் சொந்தமாகவே 2 வேலி ($13\frac{1}{3}$ ஏகர்) நன்செய் நிலம் இருக்கிறது. இவர் வேறு ஒருவருடைய 2 ஏகர் நன்செய் நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண் டிருக்கிறார். இவருக்கு இச்சட்டம் கிடையாது. இவர் குத்தகைக்கு ஒப்புக்கொண்ட நிலத்திற்கு அவர் ஒப்புக்கொண்டபடி குத்தகை அல்லது வாரம் கொடுக்கவேண்டுமே ஒழிய இச்சட்டப்படிக்கான "நியாய வாரம்" தான் கொடுப்பேன் என்று அவர் சொல்ல முடியாது. இவர் தம்முடைய சொந்த நிலம் பூராவையும் தம்முடைய சுவாதீனத்தில் வைத்துக்கொள்ளாமல் வேறு ஒருவருக்குக் குத்தகைக்கு விட்டிருந்தாலும், இவர் குத்தகைக்கு ஒப்புக் கொண்ட நிலங்களுக்கு இச்சட்டம் இல்லை. ஏனென்றால் சொந்தமாக ஒருவேலிக்குமேல் நன்செய் நிலமுள்ள சாகுபடிதார்களுக்கு இச்சட்டம் இல்லை என்று செக்ஷன் 14 (1)ல் கண்டிருக்கிறது.

உதாரணம் (2) ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்குச் சொந்தமாக 5 ஏகர் நன்செய் நிலம் இருக்கிறது. இவர் வேறு ஒருவருக்குச் சொந்தமான 6 ஏகர் நன்செய் நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு இரண்டு நிலங்களையும்

தாமே சாகுபடி செய்கிறார். இவரிடம் இருக்கும் சொந்த 11 ஏகர் நிலம் சாகுபடியில் இருப்பதால் இவருக்கு இச்சட்டம் கிடையாது. இவர் குத்தகைக்கு ஒப்புக்கொண் டிருக்கும் நிலத்திற்கு ஒப்பந்தப்படி குத்தகை கொடுக்க வேண்டும். குத்தகை நிலத்திற்கு நியாய வாரம்தான் கொடுப்பேன் என்று இவர் சொல்ல முடியாது. மேலும் ஒருவேலிக்குள் சாகுபடி நிலம் வரும் விதம் அதிகப்படி நிலத்தை விட்டுவிடும் உரிமையும் இவருக்குக் கிடையாது. ஏனென்றால் செக்ஷன் 14 (2) என்ற ஷரத்தின்படி சொந்த நிலம் சாகுபடி நிலம் இரண்டையும் சேர்த்து 10 ஏகர் நன்செய் நிலத்திற்கு அதிகப்படாமல் நிலம் வைத்திருப்பவர்களுக்குத்தான் அச்சலுகை உண்டு. உதாரணம் (1)ல் கண்டவருக்கும் இச்சலுகை கிடையாது.

உதாரணம் (3) ஒருவர் 8 ஏகர் நன்செய் நிலத்தைக் குத்தகைக்கு வைத்துக்கொண்டு சாகுபடி செய்கிறார். ஒரு வேலிக்கு மேல் (அதாவது $6\frac{2}{3}$ ஏகருக்கு மேல்) அதிகப்படியாகத் தம்மிடமிருக்கும் $1\frac{1}{3}$ ஏகர் (அல்லது 4 மா அல்லது 1 காணி) நிலத்தை வேண்டாமென்று நிலச் சொந்தக்காரரிடம் 31-3-1957க்குள் இவர் திருப்பிக் கொடுத்துவிடுகிறார். அப்படித் திருப்பிக்கொடுத்துவிடுவதை அவர் நோட்டீசு மூலம் நிலச் சொந்தக்காரருக்குத் தெரிவித்து விடுகிறார். இவர் 31-3-1957 உடன் முடிவடைகிற விவசாய வருடத்திற்கு தம்மிடமிருக்கும் எல்லா நிலங்களுக்கும் இச்சட்டப்படி நியாய வாரம் கொடுத்தால் போதும். 1-4-1957 முதல் ஆரம்பமாகும் விவசாய வருடத்தில் இவர் மீதி வைத்திருக்கும் நிலத்திற்கு இச்சட்டப்படிக்கே நியாய வாரம் கொடுத்து வரலாம். (விவசாய வருடம் ஆரம்பமாகும் தேதியை வேறாக அந்த ஜில்லா கலெக்டர் நிர்ணயம் செய்திருந்தால் உதாரணத்திலிருக்கும் தேதிக்குப் பதிலாக அத்தேதியை வைத்துக்கொள்ளவேண்டும்.)

உதாரணம் (4) ஒரு சாகுபடிதார் 2 ஏகர் நன்செய் நிலத்தை ஒருவரிடமும் 6 ஏகர் தோட்ட நிலத்தை வேறு

ஒருவரிடமும் 15 ஏகர் புன்செய் நிலத்தை மற்றொருவரிடமும் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்கிறார். இவரிடம் நன்செய்க் கணக்கில் எவ்வளவு நிலம் கணக்காகிறதென்று பார்க்கவேண்டும். இவரிடம் இருப்பது:

2 ஏகர் நன்செய்	=	2 ஏகர் நன்செய்
6 ஏகர் தோட்ட நிலம்	=	4 ஏகர் நன்செய்
15 ஏகர் புன்செய் நிலம்	=	5 ஏகர் நன்செய்
	மொத்தம்	11

இச் சாகுபடிதாரிடம் 11 ஏகர் நன்செய் நிலம் இருந்தால் எப்படியோ அப்படியேதான். செக்ஷன் 14 (1) ஷரத்தின்படி இவருக்கு இச்சட்டம் கிடையாது. 14 (2) ஷரத்தில் கண்ட சலுகையும் இவருக்குக் கிடையாது. ஏனென்றால் இவரிடம் 10 ஏகருக்குமேல் நன்செய் நிலமிருப்பதாக பாவிக்கப்படும்.]

கரும்பு, வாழை, வெற்றிலை இப் பயிர்களுக்கும், இரண்டு வருடங்களுக்குள் மகசூல் கொடுக்காத பயிர்களுக்கும் மகசூலை மட்டில் சேகரம் செய்வதற்கான ஏற்பாடுகளுக்கும் இச்சட்டம் கிடையாது.

ஒரு நிலத்தில் பிரதானப் பயிராகக் கரும்பு, வாழை, அல்லது வெற்றிலை பயிர் செய்யப்பட்டாலும் சரி; அல்லது

செக்ஷன் 15

சாகுபடி காலத்திலிருந்து தொடர்ந்த இரண்டு வருடங்களுக்கோ அல்லது அதிக காலத்திற்கோ பலன் கொடுக்காத பயிர்கள் சாகுபடி செய்யப் பட்டாலும் சரி, அவ்விதப் பயிர்கள் இருக்கும் வரையில் அந் நிலங்களுக்கு இச் சட்ட ஷரத்துக்கள் எதுவும் கிடையாது. மேலும் எவ்வித மகசூலைச் சேகரம் செய்யவோ அறுவடை செய்யவோ ஏற்படும் ஒப்பந்தங்களுக்கும் இச்சட்டம் கிடையாது.

[உதாரணம் (1) ஒருவர் வாழை சாகுபடி செய்வதற்காக ஒரு நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொள்கிறார். வாழை சாகுபடி செய்யப்படும் வரையில் இவர் செய்துகொண்ட ஒப்பந்தப்படி நிலச் சொந்தக்காரருக்குக் குத்தகை கொடுக்க வேண்டும். இச் சட்டப்படிக்கான "நியாய வாரம்" என்பது இக் குத்தகைக்குக் கிடையாது.

உதாரணம் (2) ஒருவர் ஒரு நிலத்தில் இருக்கும் மா மரங்களில் அப்பொழுது காய்த்திருக்கும் மாங்காய்களைப் பறித்துக் கொள்ளுவதற்காக அம் மாந்தோப்பைக் குத்தகைக்கு ஒப்புக்கொள்ளுகிறார். இவருக்கு இச் சட்டம் கிடையாது.

உதாரணம் (3) பிரதானமாகத் தென்னை மரங்கள் பயிர் செய்யப்பட்ட ஒரு நிலத்தை ஒருவர் குத்தகைக்கு ஒப்புக் கொள்ளுகிறார். தென்னை என்பது சாகுபடி செய்யப்பட்ட காலத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் பலன் கொடுக்காதாகையால் இக் குத்தகைக்கு இச் சட்டம் கிடையாது.]

தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள்

1952-ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டமாகிய தஞ்சாவூர் சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட

செக்ஷன் 16

ஷரத்துக்கள் ஏதாவது இச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருந்தால் இச் சட்ட ஷரத்துக்கள்தாம் செல்லும். இச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருக்கும் தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் செல்லமாட்டா.

விதிகள் செய்ய அதிகாரம்

செக்ஷன் 17

(1) இச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கான விதிகளை இயற்ற சென்னை ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அவ் விதிகள் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும்.

(2) மேலேகண்ட பொதுவான அதிகாரத்திற்குக் குந்தகம் அன்னியில் அடியில் கண்ட விஷயங்களைப் பற்றி சர்க்கார் விதிகள் செய்யலாம். அவையாவன:—(a) ரெண்டு கோர்ட்டு களும் ரெண்ட் டிரிபுனல்களும் பின்பற்ற வேண்டிய வழக்கு முறை. (b) "சாதாரண மொத்த மகசூல்" என்பதை நிர்ணயம் செய்ய கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள். (c) இச் சட்டப்படி மனுக்கள் அப்பீல்கள் இவைகளுக்கான கட்ட ணங்கள். (d) அப்பீல் தாகல் செய்யப்பட வேண்டிய கெடு. (e) நியாய வாரத்தின் ரொக்க மதிப்பை நிர்ணயம் செய்வதற் காக விவசாயப் பயிர்கள் தோட்டப் பயிர்கள் இவைகளின் விலைபற்றிய அறிக்கை. இவ் விஷயங்களைப்பற்றி விதிகள் ஏற்படுத்தலாம்.

(3) இச் சட்டப்படி செய்யப்படும் விதிகளும் அறிக்கை களும் சென்னை சட்ட மன்றத்தின் இரண்டு சபைகளுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அசெம்பிளி சபை கூடிய பதினைக்கு நாட்களுக்குள் இவ் விதிகளையும் அறிக்கைகளையும் திருத்தவும் ரத்துச் செய்யவும் அச் சபைக்கு அதிகாரமுண்டு.

சட்ட அமுலில் ஏற்படும் சிக்கல்களை நீக்க எதுவும் செய்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

இச் சட்ட ஷரத்துக்களை அமுல் நடத்துவதில் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால், அவற்றை அகற்றவேண்டியதற்கு அவசியமாகத் தோன்றும் எக்காரியத்தையும்
செக்ஷன் சமயோஜிதப்படி உத்தரவு மூலம் செய்ய சர்க்
18 காருக்கு அதிகாரம் உண்டு. சர்க்காரின் உத்தரவு நகலை சட்ட மன்றத்தின் ஒவ்வொரு சபைக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் (1955.)

(1956-ம் வருடத்திய திருத்தங்களுடன்.)

[குறிப்பு:— சென்னை ராஜ்ய சட்டசபையால் இயற்றப்பட்ட 1955-ம் வருடத்திய 25-வது சென்னைச் சட்டமாகிய இச்சட்டம் 27-9-1955 தேதியில் அமுலுக்கு வந்தது. இச்சட்டம் இப்போது 1956-ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டத்தால் பல முக்கிய விஷயங்களில் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டம் 1-10-1956 தேதியுள்ள சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு அத்தேதிமுதல் அமுலுக்கு வந்துவிட்டது. முன்பு இச்சட்டம் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருந்த இடங்களுககுக் கிடையாது. ஆனால் இத்திருத்தச் சட்டத்தால் இச்சட்டம் இப்பொழுது (மலையாளம் நீங்கலாக) சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும் என்பதைக் கவனிக்கவும். மேலும் முதலில் ஒரு வருடத்திற்கு மட்டில் அமுலில் இருக்கும்படி இயற்றப்பட்ட இச் சட்டம் இப்போது 3 வருடங்கள் அமுலில் இருக்குமென்று திருத்தப்பட்டிருக்கிறது. கீழே இருப்பது இச்சட்டதின் விளக்கமே ஒழிய வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பு அல்ல. சந்தேகங்கள் தோன்றுமிடங்களில் அதிகார பூர்வமான ஆங்கில வாசகங்களைக் கொண்டே அர்த்தம் செய்துகொள்ளவேண்டும்.]

சட்டத்தின் பெயரும், அமுலில் உள்ள இடங்களும், அமுல் காலமும்.

சென்னை ராஜ்யத்தில் சில பிரதேசங்களில் சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களை நியாய மற்ற முறையில் வெளியேற்றப்படுவதைத் தடுப்பது அவசியமாக இருப்பதால், இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

செக்ஷன் 1

(1) இச்சட்டத்திற்கு 1955-ம் வருடத்திய சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புச் சட்டம் என்று பெயர். (2) இச்சட்டம், 1929-ம் வருடத்திய மலையாளக் குடிவாரச் சட்டம் அமுலில் இருக்கும் இடங்கள் நீங்கலாக மற்ற சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும். (3) இச் சட்டம் மூன்று வருடங்கள் அமுலில் இருக்கும். (அதாவது 27-9-1958 வரை அமுலில் இருக்கும்.)

சொற்களின் பொருள்

இச் சட்டத்தில் சந்தர்ப்பத்தைப் பொறுத்து வேறுவிதமாக அர்த்தம் செய்யும்படி இருந்தாலொழிய, கீழே கண்ட சொற்களின் பொருள் பின் வருமாறு

செக்ஷன் 2

(a) ஒரு நிலத்தின் "சாகுபடிதார்" அல்லது "சாகுபடி செய்யும் குத்தகைதார்" ("cultivating tenant") என்றால் அந்த நிலத்தைக் குத்தகை அல்லது சாகுபடிக்கு ஒப்புக்கொண்டு அந் நிலத்தில் தம்முடைய சொந்த உழைப்பையும்கொண்டு சாகுபடி செய்து வருபவரைக் குறிக்கும். குத்தகை அல்லது சாகுபடி ஏற்பாடு வியக்தமாகவும் இருக்கலாம்; வேறுவிதமாகவும் இருக்கலாம். குத்தகை ஏற்

பாட்டின்படிக்குள்ள கெடுவுக்குப் பிறகும் குத்தகை நிலங்களைத் தொடர்ந்து தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருப்பவரும் இச் சட்டப்படி "குத்தகைதார்" ஆவார்.

குத்தகைதார்களுடைய வார்சுகளும் குத்தகைதார்களே யாவார்கள். ஆனால் நிலக்காரருக்கும் குத்தகைதாருக்கும் இடையே இருக்கும் "நடுமனிதர்களோ" அவர்களுடைய வார்சுகளோ இச்சட்டப்படி குத்தகைதார்களாகமாட்டார்கள். (இச்சட்ட விளக்கத்தில் "சாகுபடிதார்" என்றோ "குத்தகை தார்" என்றோ அல்லது இவ்வார்த்தைகளைச் சேர்த்தோ சொல்லப்படுவது ஆங்கிலத்தில் "cultivating tenant" என்ற வார்த்தைக்குப் பொருளாகும்.)

(குறிப்பு:—சொந்த உழைப்பையும்கொண்டு சாகுபடி செய்யாதவர்களுக்கு இச்சட்டத்தால் பாதுகாப்பு இல்லை.

முன்பு இருந்த செக்ஷன் 2(a) ஷரத்தின்படி ஒரு குத்தகைதாரானவர் கூலி ஆட்களைக்கொண்டு விவசாயம் செய்தாலும் அவர் "குத்தகைதார்" தான் என்று அர்த்தம் சொல்லப்பட்டிருந்தது. இத் திருத்தச் சட்டப்படி கூலி ஆட்களைக் கொண்டோ பண்ணை ஆட்களைக் கொண்டோமட்டில் விவசாயம் செய்யும் சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு இச் சட்டத்தால் யாதொரு பாதுகாப்பும் இல்லாதபடி இந்த ஷரத்து திருத்தி அமைக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். "சொந்த உழைப்பையும்கொண்டு சாகுபடி செய்பவர்"தான் இச்சட்டப்படி "சாகுபடிதார் அல்லது குத்தகைதார்" எனப் படுவார்கள். "சொந்த உழைப்பு" (Personal cultivation) என்பதற்குக் கீழே அர்த்தம் சொல்லப்பட் டிருப்பதையும் கவனிக்கவும்.)

(b) "சாகுபடி" (Cultivation) என்பது நிலங்களை விவசாயம் அல்லது தோட்டப்பயிர் செய்யும்பொருட்டு உபயோகப் படுத்துவதைக் குறிக்கும்.

(bb) "தோட்ட நிலம்" (Garden land) என்றால் கிணறுகளிலிருந்து அல்லது வேறு ஆதாரங்களிலிருந்து தண்ணீர் இறைக்கப்படுவதன்மூலம் பாசனம் செய்யப்படுகிற புன்செய் நிலம் என்று அர்த்தம்.

(c) "சாகுபடி நிலம்" (Holding) என்பது குத்தகைதாரால் சாகுபடிக்காக வைத்துக்கொள்ளப்பட் டிருக்கும் நிலங்களைக் குறிக்கும்.

'நிலம்' என்பதில் 'மனைக்கட்டும்' சேர்ந்ததே.

(d) "நிலம்" (Land) என்பது—விவசாயம் அல்லது தோட்டப் பயிர் செய்யும் பொருட்டு உபயோகிக்கப்படும் நிலத்தையும், அதைச் சேர்ந்த கட்டிடம், தரிசு நிலம், காலி நிலம் அல்லது காட்டு நிலம் இவற்றையும், நிலச்சுவான்தாருக்குச் சொந்தமானதும் அதே சாகுபடி அல்லது குத்தகை ஏற்பாட்டின்படி சாகுபடிதாருக்குக் குத்தகைக்கு விடப்பட் டிருக்கும் மனைக்கட்டையும் குறிக்கும்.

(e) 'நிலச் சுவான்தார்' அல்லது 'நிலத்தின் சொந்தக்காரர்' (Land lord) என்பது குத்தகைதாரை நிலத்தை விட்டு அகற்ற உரிமை உள்ள நபரைக் குறிக்கும்.

"சொந்த உழைப்பைக்கொண்டு சாகுபடி செய்வது" என்றால் என்ன?

(ee) ஒருவர் தம்முடைய சொந்த சரீர உழைப்பையும் கொண்டோ (Physical labour) அல்லது தம்முடைய குடும்பத்தினருடைய சரீர உழைப்பையும்கொண்டோ ஒரு நிலத்தைச் சாகுபடி செய்தால் அவர் "சொந்த உழைப்பைக் கொண்டு சாகுபடி செய்பவர்" (Personal cultivation) எனப்படுவார்.

[குறிப்பு:— ஆங்கிலத்தில் "contributes" என்ற வார்த்தை இருப்பதால், ஒருவர் விவசாய வேலைகள் யாவற்றையும் தம்முடைய சரீர உழைப்பைக்கொண்டோ அல்லது தம்முடைய குடும்பத்தினருடைய சரீரஉழைப்பைக்கொண்டோ தான் செய்ய வேண்டுமென்று அர்த்தமாகவில்லை. சாகுபடி செய்வதில் தம்முடைய சரீர உழைப்பையும் அல்லது தம்முடைய குடும்பத்தினருடைய சரீர உழைப்பையும் சேர்த்துக் கொண்டாலே போதும். அவர் "சொந்த உழைப்பைக் கொண்டு சாகுபடி செய்பவர்" ஆவார் என்பதைக் கவனிக்கவும்.]

(f) 'ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்' (Revenue Divisional Officer) என்றால் பிரஸ்தாபக் குத்தகை அல்லது சாகுபடி நிலமோ, அதன் பாகமோ, எந்த இடத்தில் இருக்கிறதோ, அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள 'ரிவின்யூ டிவிஷனல் ஆபீஸரை'க் குறிக்கும். அல்லது இதற்காக ராஜ்ய சர்க்காரால் நியமிக்கப்படும் 'ரிவின்யூ டிவிஷனல் ஆபீஸர்' அந்தஸ்துக்குக் குறையாத ஒரு ரிவின்யூ இலாகா அதிகாரியைக் குறிக்கும்.

ஒரு ஏகர் நன்செய் நிலமானது $1\frac{1}{2}$ ஏகர் தோட்ட நிலத்திற்கும் 3 ஏகர் புன்செய் நிலத்திற்கும் சமமாகும்

(g) ஒரு ஏகர் நன்செய் நிலமானது $1\frac{1}{2}$ ஏகர் தோட்ட நிலத்திற்கும் 3 ஏகர் புன்செய் நிலத்திற்கும் சமமாக பாவிக்கப்படும். இச்சட்டத்தில் நன்செய் நிலத்தின் விஸ்தீர்ணம் குறிப்பிடப்படும்போது அதற்குச் சமமான புன்செய் நிலத்தையும் தோட்ட நிலத்தையும் குறிப்பிடுவதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சாகுபடிதார் அல்லது குத்தகைதார்களை, நிலச்சுவான்தார்கள் வெளியேற்றக் கூடாது.

அடுத்துவரும் ஷரத்துக்களுக்குட்பட்டு, இச் சட்டம் அமுலில் இருக்கும் வரையில் (அதாவது 27-9-1958 வரையில்) சாகுபடிதார் அல்லது குத்தகைதார் எவரையும் அவருடைய சாகுபடி நிலத்திலிருந்து நிலச்சுவான்தார் அகற்றக் கூடாது. நிலச்சுவான்தார் தாமேயோ, அல்லது தமக்காக வேறு ஒருவரைக் கொண்டோ, கோர்ட்டின் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றியோ அல்லது வேறு விதமாகவோ மேற்கண்டபடி குத்தகைதாரை அகற்றக் கூடாது.

செக்ஷன் 3 (1)

ஆனால் சில குத்தகைதார்களுக்கு மேற்கண்ட பாதுகாப்பு கிடையாது. அவர்களை அகற்றத் தடை இல்லை.

(குத்தகைத் தொகையைக் கோர்ட்டில் கட்டுவது சம்பந்தமான) அடுத்து வரும் ஷரத்துக்குட்பட்டு மேலே செக்ஷன் 3 (1) ஷரத்தில் கண்ட பாதுகாப்பானது அடியிற்கண்ட குத்தகைதார்களுக்குக் கிடையாது. அதாவது:—

செக்ஷன் 3 (2)

(a) 1956-ம் வருடத்திய சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புத் திருத்தச் சட்டமானது அமுலுக்கு வருவதற்கு முன்பு (அதாவது 1—10—1956க்கு முன்பு) 1952-ம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருந்த இடங்களிலும், 1954-ம் வருடத்திய தென்கன்னட சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருந்த இடங்களிலும், இத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் (அதாவது 1-10-1956 தேதியில்)

ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகைதார் நிலச் சுவான்தாருக்குக் குத்தகை பாக்கி கொடுக்கவேண்டியதாக இருந்து, அப்பாக்கியை இச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 6 வாரங்களுக்குள் கொடுக்காவிட்டாலும் சரி; இச் சட்டம் அமுலுக்கு வந்த (1-10-1956 தேதிக்குப்) பிறகு சாகுபடிதார் அல்லது குத்தகை தார் நிலச் சுவான்தாருக்குக் கொடுக்கவேண்டிய குத்தகையை கெடுத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கொடுக்காவிட்டாலும் சரி; (aa) சென்னை ராஜ்யத்திலுள்ள மற்ற இடங்களில் 31-3-1954 தேதிக்குப் பிறகு நிலத்தின் சொந்தக்காரருக்குக் குத்தகைதார் கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கி இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 27-9-1955ல் இருந்து, அதை இச் சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் (அதாவது 27-10-1955க்குள்) செலுத்தாத குத்தகைதார்களுக்கும் சரி; இச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு குத்தகைதார் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகைகளை அவை கொடுக்கப்பட வேண்டிய கெடுவிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்தாத குத்தகைதார்களுக்கும் சரி (b) நிலத்திற்கோ, அதிலுள்ள பயிருக்கோ அழிவு அல்லது கெடுதி விளைவிக்கக்கூடிய வகையில் காரியத்தைச் செய்யும் அல்லது அசட்டையாக இருக்கும் குத்தகைதார்களுக்கும் சரி; நிலத்தில் சாகுபடி செய்வதை அடியோடு நிறுத்திவிட்ட குத்தகைதார்களுக்கும் சரி; (c) விவசாயம் அல்லது தோட்டப் பயிர் வேலை இல்லாத வேறு காரியத்திற்காக நிலத்தை உபயோகப்படுத்தும் குத்தகைதார்களுக்கும் சரி; (d) நிலத்தின் சொந்தக்காரருக்குள்ள நில பாத்தியத்தை வேண்டுமென்றே மறுக்கும் குத்தகைதார்களுக்கும் சரி - மேலே கண்ட பாதுகாப்புக் கிடையாது.

விளக்கம் I:— உண்மையாக ஏற்பட்ட தவறுதலால் ஒரு குத்தகைதாரானவர் நிலச் சுவான்தாருடைய பாத்தியத்தை மறுப்பதானது "வேண்டுமென்றே" மறுப்பதாகாது.

"இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி" என்றால் தஞ்சைச் சட்டம் இருந்த இடங்களில் 1-10-1956 என்று அர்த்தம். மற்ற இடங்களில் 27-9-1955 என்று அர்த்தம்.

விளக்கம் II:— 1956-ம் வருடத்திய சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டத்திருத்தம் அமுலுக்கு வருவதற்கு முன்பு (அதாவது 1-10-1956க்கு முன்பு) 1952-ம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருந்த இடங்களும், 1954-ம் வருடத்திய தென் கன்னட சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருந்த இடங்களும் சம்பந்தப்பட்டவரையில், "இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி"-என்று இச்சட்டத்தில் குறிப்பிடப்படும்போதெல்லாம் 1956-ம் வருடத்திய சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியை (அதாவது 1-10-1956 தேதியைக்) குறிப்பிடுவதாக அர்த்தம் செய்துகொள்ள வேண்டும்.

குத்தகை பாக்கியை ஒரு மாத கெடுவுக்குள் கோர்ட்டில் கட்டலாம்.

குத்தகைதார் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையை மிலச் சுவான்தாருக்குச் சேரும்படி கோர்ட்டில் கட்டிவிடலாம்.

செக்ஷன் 3(3)(a) குத்தகைதார் கொடுக்கவேண்டிய குத்தகையானது தானியமாக இருந்தால், கோர்ட்டில் கட்டும் தேதியில் அத்தானியத்தின் காலக்கிரயம் எதுவோ அத்தொகையைக் கோர்ட்டில் கட்டிவிடலாம்.

31—3—1954க்குப் பிறகு குத்தகைதார் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையை இச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கட்டிவிடவேண்டும். இச் சட்டம்

அமுலுக்கு வந்த பிறகு குத்தகைதார் கொடுக்கவேண்டியதாக ஏற்படும் குத்தகைத் தொகையை, அக் குத்தகை கொடுக்கப்பட வேண்டிய கெடுத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கோர்ட்டில் கட்டிவிடவேண்டும்.

கட்டிய தொகை சரியா என்பதைப்பற்றி விசாரணை.

மேற்கண்டபடி குத்தகைதார் குத்தகைத் தொகையைக் கோர்ட்டில் கட்டிய பிறகு, அவ்விஷயம் கோர்ட்டு நோட்டீஸ் மூலம் நிலத்தின் சொந்தக்காரருக்குத் தெரிவிக்கப்படும். குத்தகைதார் கட்டிய தொகை சரியான தொகையா என்பதைப்பற்றிக் கோர்ட்டார் சுருக்கமாக விசாரணை நடத்தித் தீர்மானம் செய்ய வேண்டும்.

செக்ஷன் 3 (3) (b)

இன்னும் குத்தகைதார் பாக்கி கட்டவேண்டுமென்று கோர்ட்டார் தீர்மானம் செய்யும் பட்சத்தில், அப் பாக்கியைக் கட்டக் கோர்ட்டாருக்கு நியாயமாகவும் யுக்தமாகவும் தோன்றும் கெடுவுக்குள் கட்டிவிடும்படி உத்தரவு செய்யப்படும். பாக்கி குத்தகைத் தொகையுடன் கோர்ட்டார் நிர்ணயம் செய்யும் செலவுதொகையையும் சேர்த்துக் கட்டும்படி உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதார் இருவருடைய சமய சந்தர்ப்பங்களேயும் கவனித்து, மேற்கண்டபடி பாக்கித் தொகை கட்டக் கோர்ட்டால் கெடு கொடுக்கப்படும். குத்தகைதார் மேற்கொண்டு யாதொரு தொகையும் கட்டவேண்டியதில்லை என்று கோர்ட்டார் தீர்மானம் செய்தாலும் சரி; குத்தகைதார் இன்னும் பாக்கி கட்ட வேண்டுமென்று கோர்ட்டால் தீர்மானிக்கப்பட்ட தொகையை கெடுவுக்குள் குத்தகைதார் கட்டிவிட்டாலும் சரி—சரியான கெடுவுக்குள் குத்தகைதார் குத்தகைத் தொகையைச செலுத்திவிட்டதாகவே பாவிக்கப்படும். குத்தகைதார் கட்டிய தொகை போக பாக்கி கட்ட வேண்டுமென்று உத்தரவு ஏற்

பட்டும் கோர்ட்டாரால் அனுமதிக்கப்படும் கெடுவுக்குள் அவர் பாக்கியைக் கட்டத் தவறினல், அக்குத்தகைதாரை நிலத்தை விட்டு கீழே கண்டிருக்கும் செக்ஷன் 3 (4) ஷரத்தின்படி அகற்ற நிலச் சுவான்தாருக்கு உரிமை உண்டு.

எந்தக் "கோர்ட்டி"ல் குத்தகைத் தொகை கட்டப்பட வேண்டும்.

செக்ஷன் 3 (3) (c)

எந்தக் கோர்ட்டில் குத்தகைதாரை அகற்ற வேண்டுமென்று டிக்ரியோ உத்தரவோ ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டில்தான் குத்தகைதார் தாம் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையைக் கட்டவேண்டும். அவ்விதம் எவ்வித டிக்ரியோ உத்தரவோ ஏற்படாமலிருந்தால் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் கோர்ட்டில் குத்தகைத் தொகையைக் கட்ட வேண்டும்.

குத்தகைதாரை எப்படி அகற்றுவது?

செக்ஷன் 3 (4)

[எந்த எந்த சந்தர்ப்பங்களில் குத்தகைதாருக்கு இச் சட்டத்தின் செக்ஷன் 3 (1) ஆல் அளிக்கப்பட்ட பாதுகாப்பு கிடையாதென்று மேலே செக்ஷன் 3 (2)ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.] (a) அவ்விதம் செக்ஷன் 3 (2)ல் குறிப்பிடப்பட்டிருக்கும் குத்தகைதார்களை சாகுபடி நிலத்தைவிட்டு அகற்ற வேண்டுமானல், நிலச் சுவான்தார் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் மனுக் கொடுக்கவேண்டும். இம்மனுவுக்கு ஒரு ரூபாய் கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும். குத்தகைதாரை அகற்றும்படி ஏற்கனவே கோர்ட்டில் ஒரு டிக்ரி அல்லது உத்தரவு ஏற்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், நிலச் சுவான்தார் இந்த ஷரத்துப்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் மனுப் போட்டுத்தான் குத்தகைதாரை அகற்ற முடியும். (b) இவ்வித மனு தாகல் செய்யப்பட்டவுடன், தங்கள் தங்கள் கட்சிகளைச்

சொல்லிக்கொள்ள நிலச் சுவான்தாருக்கும், குத்தகைதாருக்கும் நியாயமான சந்தர்ப்பம் அளித்து, ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் சுருக்கு முறையில் விசாரணை செய்து மனுவில் கேட்டிருக்கும்படி உத்தரவு செய்தாலும் செய்யலாம்; அல்லது மனுவைத் தள்ளினுலும் தள்ளலாம். ஆனுல் குத்தகை பாக்கியை கெடுப்படி கொடுக்காமலும், அதை கோர்ட்டில் கட்டாமலும் இருக்கும் குத்தகைதார்களுக்குக் குத்தகை பாக்கியை ஒரு கெடுவுக்குள் கட்டிவிடும்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவு செய்யலாம். நிலச் சொந்தக்காரருடையவும் குத்தகைதாரருடையவும் சமய சந்தர்ப்பங்களைக் கவனித்து நியாயமாகத் தோன்றும் கெடுவுக்குள் மேற்கண்டபடி குத்தகை பாக்கியைச் சாகுபடிதார் கட்டிவிடவேண்டுமென்று ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவிடுவார். குத்தகைதார் அவ்வுத்திரவின்படி தொகை கட்டிவிட்டால் அவர் செக்ஷன் 3 (3) (b) ஷரத்தில் கண்ட கெடுவுக்குள்ளாகவே குத்தகைத் தொகையைக் கொடுத்துவிட்டதாக பாவிக்கப்படும். குத்தகைதார் அவ்விதம் கட்டாவிட்டால், அவரை நிலத்தைவிட்டு அகற்றும்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவு செய்வார்.

1-12-1953ல் இருந்த சாகுபடிதார்கள் மீண்டும் நிலத்தை சுவாதீனம் பெறுவதற்கு உரிமை உண்டு.

1-12-1953 தேதியில் சாகுபடி நிலத்தைத் தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருந்த குத்தகைதாரிடம் இச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் நிலசுவாதீனம் இல்லாவிட்டால், நிலத்தைத் தமக்குத் திரும்பசுவாதீனம் கொடுக்கவேண்டுமென்று கேட்டு ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனுப் போட அக் குத்தகைதாருக்கு உரிமை உண்டு. **1-12-1953** தேதியில் அந்த நிலத்தை எந்த ஏற்பாட்டின்பேரில் அவர் சுவாதீனம் வைத்திருந்தாரோ அதே ஷரத்துக்களின்படி மறுபடியும் நிலத்தை சுவாதீனத்தில் வைத்துக்கொள்ள குத்தகைதாருக்கு உரிமை உண்டு.

செக்ஷன் 4 (1)

ஆனால் நிலத்தைத் திரும்ப சுவாதீனம் அடையும் உரிமை சில குத்தகைதார்களுக்குக் கிடையாது.

முன் ஷரத்தில் கண்டபடி திரும்ப நிலத்தை சுவாதீனம் அடையும் உரிமையானது அடியில் கண்ட சந்தர்ப்பங்களில் குத்தகைதாருக்குக் கிடையாது. அவையாவன:—

செக்ஷன் 4 (2) (i) இச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் குத்தகைதாரிடம் சொந்தக்காரர் என்ற முறையிலோ, சாகுபடிதார் அல்லது குத்தகைதார் என்ற முறையிலோ அல்லது இரண்டு முறையிலும் சேர்த்தோ $6\frac{2}{3}$ ஏக்கருக்கு (ஒரு வேலிக்கு) அதிகமான விஸ்தீர்ணமுள்ள நன்செய் நிலம் இருந்தால், அக் குத்தகைதார் மேற்கண்டபடி மனுப்போட முடியாது.

1953-54 அல்லது 1954-55 வருடத்தில் விற்பனை வரி, தொழில் வரி அல்லது வருமான வரி விதிக்கப்பட்ட குத்தகைதார்களுக்கும் நிலம் திரும்பக் கிடைக்காது

1953-54 அல்லது 1954-55 இந்த இரண்டு வருடங்களில் எந்த வருடத்திலாவது அந்தந்தச் சட்டங்களின்படி விற்பனை வரியோ, தொழில் வரியோ, அல்லது வருமான வரியோ, விதிக்கப்பட்டிருக்கும் குத்தகைதார்களும் தங்களுக்குத் திரும்பச் சாகுபடி நிலம் சுவாதீனமாகவேண்டுமென்று மனுப்போட முடியாது.

சில நிலச் சுவான்தார்களிடமிருக்கும் நிலத்தையும் குத்தகைதார் திரும்ப சுவாதீனம் கேட்க முடியாது.

1953—54 அல்லது 1954—55 இந்த இரண்டு வருடங்களில் எந்த வருடத்திலும் அந்தந்தச் சட்டப்படி விற்பனை

வரியோ, தொழில் வரியோ, வருமான வரியோ விதிக்கப் படாத ஒரு நிலச் சுவான்தாரானவர் தம்முடைய சொந்த நிலத்தையும் அவர் வேறு ஒருவரிடம் குத்தகைக்கு நிலம் ஒப்புக்கொண்டிருந்தால் அந்த நிலத்தையும் சேர்த்து $6\frac{2}{3}$ ஏகர் (ஒரு வேலி) விஸ்தீர்ணத்திற்கு அதிகமில்லாத நன்செய் நிலத்தை மட்டில் தம்முடைய சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அந்த நிலத்தைத் தம்முடைய சொந்த உழைப்பைக்கொண்டு சாகுபடி செய்து வந்தால்—அவ்வித நிலச் சுவான்தாரிடம் இருக்கும் நிலங்கள் தமக்குத் திரும்ப சுவாதீனம் கிடைக்க வேண்டுமென்று கேட்கக் குத்தகைதாருக்கு உரிமை இல்லை.

1—12—1953க்குப் பின் நிலத்தை வேறு குத்தகைதாரிடம் கொடுத்திருந்தாலும் பழைய குத்தகைதார் திருப்ப சுவாதீனம் கேட்கமுடியாது.

1—12—1953க்குப் பிறகு நிலச் சுவான்தாரானவர் நிலத்தை நல்லெண்ணத்துடன் வேறு ஒரு குத்தகைதாருக்குக் குத்தகைக்குவிட்டு, அக்குத்தகைதாரும் இச்சட்டம் வருவதற்கு முன்பே நிலத்தைச் சாகுபடியும் செய்திருந்தால்—முன்பு இருந்த குத்தகைதார் நிலத்தைத் திரும்ப சுவாதீனம் கேட்க முடியாது. ஆனால் புது குத்தகைதாரிடம் சொந்தக்காரர் முறைமையிலும் சாகுபடிதார் முறைமையிலும் அல்லது இரண்டும் சேர்ந்து $6\frac{2}{3}$ ஏகர் நன்செய் நிலத்திற்கு அதிக விஸ்தீர்ணமுள்ள வேறு நிலங்கள் சுவாதீனத்திலிருந்து, முன்பு அகற்றப் பட்ட பழைய சாகுபடிதாரிடம் அந்த அளவுக்குக் குறைவான விஸ்தீர்ணமுள்ள நிலங்களே இருந்தாலும் அல்லது யாதொரு நிலமும் இல்லாமலே இருந்தாலும்—பழைய சாகுபடிதார் நிலத்தைத் திரும்ப தம்முடைய சுவாதீனத்தில் அடைய உரிமை உண்டு.

நிலம் திரும்பக் கிடைக்க மனுப்போட வேண்டும்.

செக்ஷன் 4(3) மேலே செக்ஷன் 4(1)ன்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்குப் போடப்படும் மனு இச்சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து 30 நாட்களுக்குள் போடப்பட வேண்டும். மனுவுக்கு ஒரு ரூபாய் கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும்.

தாமதமாகப் போடப்படும் மனுக்களையும் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலே கண்ட 30 நாட்களுக்குள் மனுப் போடாததற்குப் போதுமான காரணம் காட்டினால், அக்கெடுவுக்குப் பிறகு போடப்படும் மனுக்களையும் ஏற்றுக்கொள்ள ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரமுண்டு.

மனு விசாரணை.

மேலே 3-வது ஷரத்துப்படி கொடுக்கப்படும் மனுவின் பேரில் நிலத்தின் சொந்தக்காரருக்கும், அப்போது நிலத்தை சாகுபடி செய்யும் குத்தகைதார் இருந்தால் அவருக்கும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் தங்களுடைய கட்சிகளைச் சொல்லிக் கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

செக்ஷன் 4(4) ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரானவர் மனுவை சுருக்கமான முறையில் விசாரணை செய்து, மனுவை ஏற்றுக் கொண்டாலும் கொள்ளலாம்; அல்லது தள்ளினாலும் தள்ளிவிடலாம். மனுவை ஏற்றுக்கொண்டு உத்தரவு செய்யும்போது கீழே கண்ட விஷயங்களைப்பற்றி அவருக்கு நியாயமாகவும் யுக்தமாகவும் தோன்றும் நிபந்தனைகளை ஏற்படுத்தவும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரம் உண்டு.

அதாவது, (i) ஒரு வருட குத்தகை அல்லது பகுதித் தொகைக்கு அதிகப்படாமலிருக்கும் பாக்கியை மனுதார் நிலச்சுவான்தாருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தலாம். மேலும் (ii) மனுதார் சுவாதீனத்தில் இல்லாத காலத்தில் நிலத்தின் சொந்தக்காரரோ புதிய சாகுபடிதாரரோ அப்போது அறுவடையாகாதிருக்கும் பயிருக்காகச் செலவு செய்திருக்கும் தொகைகளை மனுதார் அவருக்குக் கொடுத்து விட வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தலாம். இவ்விதச் செலவு தொகை எவ்வளவு என்பதைப் பற்றியும் அதை எவ்விதம் திருப்பிக் கொடுப்பது என்பதைப் பற்றியும் கட்சிக்காரர்கள் தங்களுக்குள்ளேயே ஏற்பாடுசெய்து கொள்ளாவிட்டால் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரே மேலே கண்டபடி அது சம்பந்தமான நிபந்தனைகளை ஏற்படுத்துவார்.

விளக்கம்

மேலே கண்டபடி நிலத்தின் சொந்தக்காரர் அல்லது புதிய குத்தகைதார் செலவு செய்த தொகைகளை மனுதார் கொடுத்துவிடவேண்டுமென்று உத்தரவு செய்வதற்குப் பதிலாக ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் வேறு விதமாகவும் உத்தரவு செய்யலாம். அதாவது தாம் உத்தரவு செய்யும்போது நிலத்தில் உள்ள மகசூல் அறுவடை செய்யப்பட்ட பிறகு நிலத்தை மனுதார் வசம் விட்டுவிடும்படியும் உத்தரவு பிறப்பிக்கலாம்.

இச்சட்டம் வந்தபிறகு இச்சட்டப்படிக்கல்லாமல் வெளியேற்றப்பட்ட குத்தகைதார்கள் இரண்டு மாதத்திற்குள் மனுப்போட்டு நிலத்தைத் திரும்ப அடையலாம்.

இச்சட்டம் அமுலுக்கு வந்தபிறகு இச்சட்டத்தின் செக்ஷன் 3(4) ஷரத்தின்படி அல்லாமல் வெளியேற்றப்பட்ட

குத்தகைதார்கள், அகற்றப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளோ, அல்லது சென்னை சாகுபடி

செக்ஷன் 4(5)

தார் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து (அதாவது 1—10—56 தேதியிலிருந்து) இரண்டு மாதங்களுக்குள்ளோ, தமக்குக் குத்தகை நிலம் திரும்பக் கிடைக்க வேண்டுமென்று ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனுப்போடவும், குத்தகைதாருக்குள்ள உரிமைகளுடனும் கடமைகளுடனும் நிலத்தைத் தம் வசம் வைத்திருக்கவும் குத்தகைதாருக்கு உரிமை உண்டு. மேலேகண்ட செக்ஷன் 4(4) என்ற ஷரத்து அவ்வித மனுவுக்குப் பொருந்தும்.

சொந்த உழைப்பைக்கொண்டு சாகுபடி செய்வதற்காக நிலச் சுவான்தார் குத்தகைதாரிடமிருந்து நிலத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் உரிமை.

(1) இச் சட்டத்தில் உள்ள வேறு ஷரத்துக்கள் எப்படி இருந்தபோதிலும், ஒரு நிலச்சுவான்தார் தாமே சொந்த உழைப்பைக்கொண்டு சாகுபடி செய்வதற்காக, எந்தக் குத்தகைதாரிடமிருந்தும் அக்குத்தகைதாருக்குச் சாகுபடிக்காக விடப்பட்டிருக்கும் நிலத்தில் பாதி விஸ்தீர்ணத்திற்கு மேற்படாத நிலத்தைத் தாமே திரும்ப எடுத்துக்கொள்ள உரிமை உண்டு.

செக்ஷன் 4A

(2) மேலே (1) வது ஷரத்தின்படி நிலத்தைத் திரும்ப எடுத்துக்கொள்ள விரும்பும் நிலச் சுவான்தார் இதற்காக ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும். ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் மனுவைப் பெற்றுக் கொண்டு, நிலச் சுவான்தாருக்கும் நிலத்தை சுவாதீனம் வைத்

திருக்கும் குத்தகைதாருக்கும் தங்கள் கட்சிகளைச் சொல்லிக் கொள்ள நியாயமான சந்தர்ப்பம் அளித்து, சுருக்குமுறையில் விசாரணை செய்து குத்தகைதாரானவர் நிலத்தை நிலச்சுவான் தாரிடம் விட்டுவிட வேண்டுமென்று உத்தரவு செய்தாலும் செய்யலாம்; அல்லது மனுவைத் தள்ளினாலும் தள்ளலாம். குத்தகைதார் நிலத்தை நிலச் சுவான்தாரிடம் திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்று செய்யப்படும் உத்தரவில் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு நியாயமானவை என்றும் யுக்த மானவை என்றும் தோன்றும் நிபந்தனைகளை ஏற்படுத்த அதிகாரமுண்டு. அறுவடை செய்யப்படாமல் நிலத்தில் இருக்கும் பயிர் சம்பந்தமாகக் குத்தகைதார் செய்திருக்கும் செலவுக்காகவோ, வேலைக்காகவோ, நிலச்சுவான்தார் குத்தகை தாருக்கு வகை செய்யவேண்டிய விஷயமாய் நிலச் சுவான் தாரும் குத்தகைதாரும் தமக்குள்ளேயே ஏதாவது ஏற்பாடுகள் செய்துகொள்ளாவிட்டால், இது சம்பந்தமான நிபந்தனைகளை ஏற்படுத்த ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரமுண்டு.

விவரணம்:— குத்தகைதார் செய்த செலவுகளுக்காகவோ வேலைக்காகவோ வகை செய்வது சம்பந்தமாக மேலே கண்ட படி நிபந்தனைகள் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ரிவின்யூ டிவி ஷனல் ஆபீசர் இஷ்டப்பட்டால், அவர் உத்தரவு பிறப்பிக்கும் போது நிலத்தில் பயிர் செய்யப்பட்டிருக்கும் மகசூல் அறுவடை யான பிறகு மனுதாருக்கு நிலத்தின் சுவாதீனம் கிடைக்கும்படி ஒத்திப்போடவும் அதிகாரமுண்டு.

27-9-1955க்கு முன்பு இருந்த குத்தகையே தருவ தாக குத்தகைதார் ஒப்புக்கொண்டால், நிலத்தைக் குத்தகைதாரே வைத்துக்கொள்ளலாம்.

(3) சொந்த உழைப்பைக்கொண்டு சாகுபடி செய்வதற் காகக் குத்தகைதாரிடமிருந்து நிலச் சுவான்தார் நிலத்தைத்

செக்ஷன் 4 A (3)

திரும்பக் கேட்கும்போது, நிலச் சுவான்தாருக்கு எவ்வளவு நிலம் திரும்ப எடுத்துக்கொள்ள பாத்திய முண்டோ, அவ்வளவு நிலத்திற்கு 27-9-1955க்கு முன் எவ்வளவ குத்தகை இருந்ததோ அக் குத்தகையைக் கொடுப்பதாகக் குத்தகைதார் ஒப்புக்கொள்ள லாம். அப்படிக் குத்தகைதார் ஒப்புக்கொண்டால், அந்தக் குத்தகையைக் கொடுத்து வருவதின்பேரில், நிலத்தைக் குத்தகைதாரே தொடர்ந்து சுவாதீனத்தில் வைத்துக்கொண் டிருக்க ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் அனுமதி கொடுக்கலாம். அந்த நிலத்தைக் குத்தகைதார் சாகுபடி செய்யும் வரையில் அதே குத்தகையைக் கொடுத்துவர கடமைப்பட்டவராவார்.

$13\frac{1}{3}$ ஏகருக்கு (2 வேலிக்கு) மேல் சொந்த நன்செய் நிலமுள்ளவர்களும் — சிலவகை வரிகள் கொடுப்பவர்களும் நிலத்தைத் திரும்ப வாங்க முடியாது. 5 ஏகருக்கு மேலும் திரும்ப வாங்க முடியாது.

செக்ஷன் 4 A (4)

(4) சென்னை சாகுபடிதார் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் (அதாவது 1-10-1956ல்) $13\frac{1}{3}$ ஏகர் நன்செய் நிலத்திற்குமேல் சொந்த நிலமுள்ள வர்களும்; 1954–55 அல்லது 1955–56 வருடங் களில் அததற்கான சட்டங்களின்படி விற்பனை வரியோ, தொழில் வரியோ, வருமான வரியோ விதிக்கப்பட்டவர்களும் குத்தகைதாரிடமிருந்து நிலம் திரும்பக் கிடைக்க வேண்டுமென்று மேலே கண்ட செக்ஷன் 4 A (1) ஷரத்தின்படி மனுப் போட முடியாது. மேலும் ஏற்கனவே சொந்தக்காரர் முறையிலோ, குத்தகைதார் முறையிலோ அல்லது இரண்டு முறையிலுமோ நிலச் சுவான்தாருடைய சுவாதீனத்தில் ஏதாவது நிலங்கள் இருந்தால் அவை 5 ஏகர்

நன்செய் நிலத்திற்கு எவ்வளவு குறைகிறதோ அவ்வளவு விஸ்தீர்ணமுள்ள நிலத்திற்கு மேல் குத்தகைதாரிடமிருந்து நிலத்தைத் திரும்ப வாங்க நிலச்சுவான்தாருக்கு உரிமை இல்லை. (அதாவது 5 ஏகர் அல்லது அதற்குமேல் நன்செய் நிலத்தை சுவாதீனம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்கள், தங்களுடைய குத்தகைதாரிடமிருந்து நிலத்தைத் திரும்பக் கேட்கவே முடியாது. அதற்குக் குறைவாக சுவாதீனம் வைத்திருப்பவர்கள் 5 ஏகர் நன்செய் நிலத்திற்கு அவர்களிடமிருக்கும் நிலம் எவ்வளவு குறைகின்றதோ அப்படிக் குறையும் அளவுள்ள நிலத்தைத்தான் குத்தகைதாரிடமிருந்து திரும்ப அடைய முடியும்.)

1-10-1956 தேதியில் குத்தகைதாரிடமிருந்து சாகுபடி நிலத்தைத் திரும்பக் கேட்க உரிமை இல்லாதவர்களுக்குப் பிறகு அவ்வுரிமை ஏற்படாது.

1956-ம் வருடத்திய சென்னை சாகுபடிதார் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் (அதாவது 1—10—1956ல்) இந்த செக்ஷனில் கண்டபடி குத்தகைதாரிடமிருந்து நிலத்தைத் திரும்ப சுவாதீனம் அடைய ஒரு நிலச்சுவான்தாருக்கு உரிமை இல்லாவிட்டால், பிறகு அவருடைய நிலைமையில் ஏற்படும் மாறுதல்களால் அவருக்கு அவ்வுரிமை வந்துவிடாது.

செக்ஷன் 4 A (5)

நிலச்சுவான்தார் ஒரு வருடத்திற்குள் சொந்த சாகுபடி செய்யாவிட்டால் — குத்தகைதார் மனுப் போட்டு அந் நிலத்தைத் தம்வசம் திருப்பலாம்.

இந்த செக்ஷன்படி குத்தகைதாரிடமிருந்து நிலத்தைத் தம்வசம் திரும்ப அடைந்த நிலச்சுவான்தாரானவர், தமக்குச்

செக்ஷன் 4 A (6)

சுவாதீனம் கிடைத்த காலத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் அந்நிலத்தைத் தம்முடைய சொந்த உழைப்பினால் சாகுபடி செய்யாவிட்டாலும் சரி; அல்லது அந் நிலத்தை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்குத் தரிசாகவே வைத்திருந்தாலும் சரி அல்லது மோசடியான பொய் விஷயங்களைச் சொல்லி நிலத்தைத் திரும்ப சுவாதீனம் அடைந்திருந்தாலும் சரி — முன்பு அந் நிலத்தை வைத்திருந்த குத்தகைதாரானவர் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மனுப் போட்டு நிலத்தை மறுபடியும் தம்வசம் திருப்பி ஒரு குத்தகைதாருக்குள்ள உரிமைகளுடனும் கடமைகளுடனும் அந் நிலத்தைத் தம்வசம் வைத்திருக்க உரிமை உள்ளவராவார். இவர் போடும் மனுவுக்கு மேலே செக்ஷன் 4 (4) ஷரத்தில் கண்டிருக்கும் விதிகள் பொருந்தும்.

குத்தகைப் பத்திரம் எழுதிக்கொள்ள வேண்டும்.

செக்ஷன் 4 B

(1) 1956-ம் வருடத்திய சென்னைச் சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தேதிக்குப்பிறகு (அதாவது 1-10-1956க்குப் பிறகு) ஒரு நிலச் சுவான்தாருக்கும் குத்தகைதாருக்குமிடையே குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டால் அவ்விதக் குத்தகையின் கெடு ஆரம்பத்திலிருந்து ஒரு நியாயமான காலத்திற்குள் ஒரு குத்தகைப் பத்திரம் எழுதப்படவேண்டும். இதற்காக ஏற்படும் விதிகளில் கண்ட நமூனைப்படி இக் குத்தகைப் பத்திரம் மூன்று பிரதிகளாக எழுதப்படவேண்டும். அக் குத்தகைப் பத்திரத்தில் குத்தகைதாருடைய பெயர், விவரம், குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் ஸ்தலப் பெயர் இருந்தால் அது, சர்வே நம்பர், விவரம், விஸ்தீர்ணம் குத்தகை ஏற்பாட்டின், ஷரத்துக்கள் இவ்விஷயங்கள் கண்டிருக்கவேண்டும். குத்தகைப் பத்திரங்களில் நிலச் சுவான்தார் அல்லது அவருடைய ஏஜண்டும், குத்தகைதாரும் கையெழுத்துப் போடவேண்டும். மூன்று பிரதிகளில் ஒரு பிரதியை நிலச்

சுவான்தார் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பிரதியைக் குத்தகைதார் வைத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவது பிரதியை நிலச்சுவான்தாரோ அவருடைய ஏஜண்டோ, அதில் குத்தகைதார் கையெழுத்துப் போட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாலூக்கா ஆபீசுக்கு அனுப்பவேண்டும்.

ஆனால் நிலச்சுவான்தாரோ அல்லது குத்தகைதாரோ குத்தகைப் பத்திரத்தில் கையெழுத்துப்போட மறுத்தாலும், நியாயமில்லாமல் காலதாமதம் செய்தாலும் குத்தகைதாரோ நிலச் சுவான்தாரோ குத்தகைப் பத்திரத்தைத் தாலூக்கா ஆபீசுக்கு அனுப்பிவிடலாம். அப்படி அனுப்பும்போது மற்றவர் கையெழுத்திட மறுத்ததாகவோ, நியாயமில்லாமல் காலதாமதம் செய்ததாகவோ உறுதிமொழி செய்து கையெழுத்துப்போட்டு அனுப்ப வேண்டும்.

(2) குத்தகைப் பத்திரத்திற்கு ஸ்டாம்பு கிடையாது.

(3) நிலச்சுவான்தார் அல்லது அவருடைய ஏஜண்டோ, குத்தகைதாரோ, குத்தகைப் பத்திரத்தில் கையெழுத்துப்போட மறுத்தாலும், மேலே கண்ட செக்ஷன் 4 B (1) ஷரத்தின்படி குத்தகைப் பத்திரத்தைத் தாலூக்கா ஆபீசுக்கு அனுப்பத் தவறினாலும், நிலச்சுவான்தாருக்கோ, குத்தகைதாருக்கோ ரூ. 50 வரை அபராதம் விதிக்க ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரம் இருக்கிறது. அபராதத் தொகை ரிவின்யூ கிஸ்தியைப்போல வசூல் செய்யப்படும்.

காலாவதி கெடு கணக்குச் செய்வதுபற்றி

செக்ஷன் 5

சாகுபடிதாரை நிலத்திலிருந்து அகற்ற வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காகக் காலாவதி கெடுக் கணக்குச் செய்வதில், இச் சட்டத்தின் செக்ஷன் 3 ல் கண்டபடி குத்தகைதாருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும் காலத்தை நீக்கிக் கணக்குச் செய்யவேண்டும்.

விளக்கம்:—குத்தகைதாரை நிலத்தைவிட்டு அகற்ற வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் டிக்ரி அல்லது உத்தரவில் வேறு பரிகாரங்களும் அளிக்கப்பட்டிருந்தாலும் அவை குத்தகைதாரை அகற்ற ஏற்பட்ட டிக்ரி அல்லது உத்தர வாகவே பாவிக்கப்படும்.

சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் இல்லை

செக்ஷன் 6

மேலே செக்ஷன் 3(3) ஷரத்தில் குறிப்பிடப்படும் விஷயம் தவிர, இச்சட்டத்தின்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் விசாரித்து முடிவு செய்யவேண்டியதாகக் கண்டிருக்கும் எந்த விஷயங்களைப் பொறுத்தும் எந்த சிவில் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை. இச்சட்டத்தால் கொடுக்கப்படும் அதிகாரத்தை அனுசரித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தோ, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பொறுத்தோ எந்தக் கோர்ட்டும் 'இன்ஜங்ஷன்' என்ற தடை உத்தரவு பிறப்பிக்க அதிகாரமில்லை.

சில சிவில் கோர்ட்டுத் தாவாக்கள் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றப்படும்.

செக்ஷன் 6A

நிலம் சுவாதீனம் கிடைக்கவோ, அல்லது நிலம் சம்பந்தமாகத் தடை உத்தரவு (இன்ஜங்ஷன்) வாங்கவோ கோர்ட்டுகளில் இருக்கும் தாவாக்களில்—அத்தாவாவின் பிரதிவாதியானவர் இச்சட்டத்தால் அனுகூலமடையக்கூடிய குத்தகைதார் என்று பிரமாணப் பத்திரிகை மூலமாகவோ, வேறு விதமாகவோ ருசுவானால், கோர்ட்டார் அத்தாவாவின் விசாரணையை மேல் நடத்தக் கூடாது. அத்தாவாவைக் கோர்ட்டார் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றிவிடவேண்டும். அத்தாவாவை

இச்சட்டப்படி தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவைப்போல பாவித்து, ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும். அவ்வித மனுக்களுக்கும் மனுதார்களுக்கும் இச்சட்ட ஷரத்துக்கள் எல்லாம் பொருந்தும்.

ஹைகோர்ட்டில் 'ரிவிஷன்' செய்யலாம்

செக்ஷன் 6B

ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் ஹைகோர்ட்டுக்கு உட்பட்ட ஒரு கோர்ட்டாக பாவிக்கப்பட்டு 1908-ம் வருடத்திய சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் செக்ஷன் 115 என்ற ஷரத்தின்படி ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருடைய உத்தரவுகளைப் பரிசீலனை (ரிவிஷன்) செய்ய ஹைகோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

விதிகள்

செக்ஷன் 7

(1) இச்சட்டத்தின் நோக்கங்களை அமுல் நடத்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அவ்விதிகள் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். (2) விதிகள் ஏற்பட்டவுடன் அவைகள் ராஜ்ய சட்டசபைகள் இரண்டிலும் சமர்ப்பிக்கப்பட்டு பதினான்கு நாட்கள்வரை வைத்திருக்கப்படவேண்டும். அவ்விதிகளை ரத்து செய்யவும் திருத்தவும் சட்டசபைகளுக்கு அதிகாரமுண்டு.

சென்னைச் சாகுபடிதார் பாதுகாப்பு திருத்தச் சட்டம் (1956)

மற்ற ஷரத்துக்கள்.

[சென்னைச் சட்டசபையால் இயற்றப்பட்ட 1956-ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டம். இச்சட்டம் 29-9-1956ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று 1-10-1956 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இத் திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 7 வரையில் உள்ள ஷரத்துக்களால்தான் 1955-ம் வருடத்திய சென்னைச் சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்படுகின்றது. சில புதிய செக்ஷன்களும் தாய்ச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வ எல்லாம் மேலே உள்ள சட்ட விளக்கத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளன. இத்திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 8 முதல் 12 வரையில் உள்ள மற்ற விஷயங்கள் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டிருப்பது இத்திருத்தச் சட்டத்தின் செக்ஷன்களின் எண்ணிக்கை.

திருத்தச்சட்டம் அமுலுக்கு வரும்வரை தாய்ச்சட்டம் நீடிக்கும்

(1955-ம் வருடத்திய சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புச் சட்டம் (1955) என்பது ஒரு வருடம் வரைதான் நீடிக்குமென்று முதலில் இருந்து, அதன்படி அச்சட்டம் 27-9-1956ல் அமுல் இழந்து விட்டது. இத் திருத்தச் சட்டம் 1—10—1956ல் தான் அமுலுக்கு வந்தது.)

திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 8

1955-ம் வருடத்திய சட்டமானது இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும்வரை நீடித்திருப்பதாக பாவிக்கப்படும். திருத்தங்களுடன்கூடிய 1955-ம் வருடச் சட்டமானது 3-வருடங்கள் அமுலில் இருக்கும். (அதாவது 1955-ம் வருடச் சட்டம் அமுலுக்கு வந்த

27—9—1955 தேதியிலிருந்து 3-வருடங்கள் அமுலில் இருக்கும்.)

தென்கன்னட சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 9

1954-ம் வருடத்திய தென்கன்னட சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் (1954-ம் வருடத்திய 6-வது சென்னைச் சட்டம்) இதன்மூலம் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால் அச் சட்டப்படி எடுக்கப்பட்டு பெண்டிங்கில் இருக்கும் நடவடிக்கைகள் எல்லாம் இச்சட்டம் வராவிட்டால் எப்படியோ அப்படியே கோர்ட்டுகளால் முடிவு செய்யப்படும்.

தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் இதற்கு முரணாக இருந்தால் செல்லாது.

திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 10

1952-ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டமாகிய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட ஷரத்துக்கள் எவையாவது இச் சட்டத்திற்கு (அதாவது திருத்தி அமைக்கப்பட்ட 1955-ம் வருடத்திய சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புச் சட்டத்திற்கு) முரணாக இருந்தால், அவ்வித தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் செல்லா. அவ்விஷயங்களில் இச்சட்ட ஷரத்துக்களேதான் செல்லும்.

தஞ்சைச் சட்டப்படி சமரச அதிகாரியிடம் இருக்கும் சில நடவடிக்கைகள் — ரிவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு மாற்றப்படும். ஆனால் ரிவின்யூ கோர்ட்டில் இருக்கும் நடவடிக்கைகள் அங்கேயே இருக்கும்.

(1) 1952-ம் வருடத்துத் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி போடப்பட்டு, இத் திருத்தச்

சட்டம் அமுலுக்கு வரும் தேதியில் (1-10-1956ல்) சமரச அதிகாரி (கன்சிலியேஷன் ஆபீசர்) யிடம் பெண்டிங்கில் இருக்கும் நடவடிக்கைகள் இச் சட்டத்தில் கண்டிருக்கும் விஷயங்களைப் பற்றியவையாக இருந்தால், அவ்வித மனுக்கள் இச்சட்டப்படி அதிகாரமுள்ள ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர்களுக்கு மாற்றப்பட்டு அவர்களால் முடிவு செய்யப்படும். (2) இச் சட்டம் அமுலுக்கு வரும்போது ரிவின்யூ கோர்ட்டில் பெண்டிங்கில் இருக்கும் நடவடிக்கைகள் எல்லாம், இச் சட்டம் வராவிட்டால் எப்படியோ, அவ்விதமே பாவிக்கப்பட்டு, அதே ரிவின்யூ கோர்ட்டால் முடிவு செய்யப்படும்.

திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 11

27-9-1956க்கும் 1-10-1956க்குமிடையே அகற்றப்பட்ட குத்தகைதார்கள்.

(1) 1955-ம் வருடத்திய சென்னை சாகுபடி செய்யும் குத்தகைதார் பாதுகாப்புச் சட்டம் 27—9—1956 தேதியில் அமுல் இழந்துவிட்டதென்று வைத்துக்கொண்டு 27—9—1956 தேதிக்கும் 1—10—1956க்குமிடையே முடிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டு இச் சட்டப்படி முடிவு செய்யப்படும். (2) மேற்கண்ட தேதிகளுக்குமிடையே 1955-ம் வருடத்தியச் சட்டம் அமுலில் இல்லை என்ற காரணத்தினால் சாகுபடி நிலத்திலிருந்து அகற்றப்பட்ட குத்தகைதார்கள் மனுப் போட்டு நிலத்தை இச் சட்டப்படி திரும்ப அடைய உரிமை உண்டு. (3) அப்படி இவர்கள் போடும் மனுக்களுக்கு 1955-ம் வருடத்திய சட்டத்தின் செக்ஷன் 4ல் கண்ட ஷரத்துக்கள் பொருந்தும்.

திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 12

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM FOR THE VAKIL PUBLICATIONS Private LIMITED, *Editor*: V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.

216523

இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956

ஸ்திரீகளுக்குப் புதிய வார்சு பாத்தியமும் சொத்தில் பூர்ண உரிமைகளும் அளிக்கும் சட்டம் இதுதான்.

விலை ரூ. 1.

ரிஜிஸ்டர் தபாலில் அனுப்ப அணா 9 சேர்த்து கீழேகண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யவும்.

மானேஜர், "வக்கீல்" தமிழ் சட்டப் பத்திரிகை,
73, டபீர் மேலவீதி, (தபால் பெட்டி 26),
கும்பகோணம், (தென் இந்தியா).

"வக்கீல்" சந்தாதாரர்கள் கவனிக்கவும்.

"வக்கீல்" 1956 இதழ் 4 & 5 (ஜூலை—ஆகஸ்டு) என்ற "இந்து வார்சுரிமைச் சட்டம்" அடங்கிய பிரசுரத்திற்குப் பிறகு "நிலச் சட்டங்கள்" என்ற இந்த இதழ் 1956 நவம்பர்—டிசம்பர் இதழ் 6 & 7 என்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. முன்பு அறிவித்தபடி இந்த இதழும் சந்தாதார... பாதி விலையில் அனுப்பப்பட்டு... சட்டத்திற்கு ...